பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4. | ஈரோடு, விபவ ஹு சித்திரை மீ 17வ. (29—4—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 1



இனம்! இனம்

மூனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம் ... எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



## டிடக்டாஸ்
அல்லது
## துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் ... களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம் ...



டைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின் தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் ... லர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 ... போட்டோ படங்களுடன் ... கருவி விலை ... தான்.


மலாய் ... முன் பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் ... விலை அனுப்பமுடியாது.

பாரிஸ் ... ஜி. டி. மதராஸ்.



## டேபில் டைம்பீஸ் இனம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூர்த்தங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.



முன் விலை ரூ. 14. இப்போது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இணைப்புச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. எழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஹு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.



## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரண்ட ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்து அனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—6—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.



இனம்! இனம்!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனான்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.



## கணித சோதிடம்

பர்கித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

ஓம்! ஓம்!! ஓம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், கேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரம்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

# 'இந்திய-மாதா'

மிஸ் கதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு:

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம் உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதாராஸ்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

புதிய கம்பளி,
போர்வைகள் ரட்டுகள்.

எங்களிடத்தில், டிராவலிங் (Rugs) ரட்டுகள், சிங்கிள், டபிள், பார்ப்பதற்கு ரங்காயும், பான்சியாயும், சுற்றிலும் பூபோட்டதாயும், 60 X 90 அங்குல சைசில் ரூ. 6—8—0 முதல் ரூ 25 விலை வரையில் இருக்கின்றன. மலை கூலியாட்களுக்கு வேண்டிய கருப்பு கம்பளிகளும் இருக்கின்றன. வேண்டிய சாக்குகளுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

ஷா. தஞ்சிஜாவர்சந்த்,
தாரிவால் ஏஜன்ஸி,
சிக்கபேட்டை, பெங்களூர் சிட்டி.

# பெண்களின் பரிதாப நிலைமை.

2-ம் கட்டுரை.

ஒரு பெண்ணினல்லார் எழுதுவது.

கலியாணமென்பது யாதென ஆராய்ச்சி செய்து பார்த்தால் அது ஒரு வித நட்பென்றேசொல்லலாம். எவ்விதமெனில் உண்மையான நண்பர்கள் ஒருவருக்கொருவர் இயற்கையில் எவ்விதம் நடப்பார்களோ அது போல் ஆண் பெண்ணென்ற இரு பிறப்பினரையும் பலரால் நேசப்பான்மையாக சேர்த்து வைக்கப்படுகிற ஒரு வித கூட்டுறவென்றே சொல்லாம். அதில் ஸ்திரீகள் புருஷர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய விஷயங்களை அநேக இடங்களில் சொல்லியிருக்கிறார்கள் அது உண்மை அன்புடையவர்களுக்கு அவசியமேயில்லை. எழுத்தில் எந்தெந்த காலத்தில் எவ்வெவ்விதமாய் நடந்து கொள்ள வேண்டுமென்று உரைத்திருக்கிறதோ அதிலகப் படாத அநேக சந்தர்ப்பங்கங்கள் நேரிடலாம் உதாரணமாக 'ஒரு குடும்பத்தில் தகப்பனிறந்த நடு வயதுள்ள ஓர் வாலிபனும் அவன் தாயுமிருந்து வந்தார்கள் அப்பொழுது அவ்வூரில் ஒருவனுக்குத் தாயிறந்து விட்டாள் மேற் சொன்னகுடும்பத்தில் தாய் மகனைப்பார்த்து 'இத்தனை காலம் நீ சிறுவனாயிருந்தாய் இனிமேல் நீ பெரியவனாய் விட்டாயாகையால் ஊரில் நடக்கும் கல்யாணம் இழவு முதலியவைகளுக்கு நீ போகாமலிருப்பது சரியல்ல மேற்கண்ட தாயிறந்தவன் வீட்டிற்கு போய் துக்கம் விசாரித்துவா' வென்று சொன்னாள். அதற்கு மகன் 'அதை யெப்படி விசாரிப்பதென்று நீங்கள் கொஞ்சம் சொல்லுவீர்களானால் நான் போய் விசாரித்து வருகிறேன்' என்று சொல்ல தாய் "உன் தாய் மிகவும் நல்லவள் ஊரில் யாரிடத்திலும் அபிமானித்து நடந்து வந்தாள் ஆகையால் உனக்கு தாயிறந்தாளென்று ஒருவித வருத்தமிருந்த போதிலும் ஊருக்கே தாயில்லாமல் போனது போலிருக்கின்றதென்று சொல்லு இது தெரியாதா" என்று தாய் சொல்ல மகன் "அம்மா எனக்கு தெரிந்து விட்டது இனிமேல் நீங்கள் சொல்லத் தேவையில்லை" யென்று சொல்லி வேறொருவனுக்கு பெண்சாதி யிறந்ததும் அவ்விடம் போய் "உன் பெண்சாதி மிகவும் நல்லவள் உனக்குப் பெண்சாதி யிறந்து விட்டாளென்று நினைக்காதே ஊருக்கே அவ்விதமாயிற்று" என்று அவன் அறியாமையினால் சொன்ன ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது இது நிற்க.

ஸ்திரீகளுக்குதன்புருஷனிடத்தில்உண்மையானதாகச் சொல்லும் அன்பிருக்க வேண்டும். நுண்ணறிவு இருக்க வேண்டும். அதோடுபடிப்பு, நல்ல சகவாசம் முதலியவைகளிருந்தால் மேற்கண்ட சட்டங்கள் அனாவசியம் ஆனால் ஆடவர்களும் மேற்கண்ட விதமே பெண்களிடத்தில் அன்பு வைத்து நடத்தினால் ஒரு மிருகமாயிருந்த போதிலும் எவ்வளவோ அன்புடன் நடக்குமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அப்படியிருக்க மிருகத்தைக் காட்டிலும் மேம்பட்ட அறிவுடையவர்களென்று சொல்லப்படுகிற மானிட வகுப்பினராகிய ஸ்திரீகள் கேவலமாய் நடப்பார்களா. இது நிற்க அன்பின்மகிமையை அறியாதவர்களில்லை. அப்படியிருந்தும் சிற்றறிவுடைய நான் அதைச் சொல்ல முன்வருவது அசாத்தியமென்ற போதிலும், என் பேதை அறிவுக்கெட்டின வரையில்சொல்லப் புகுந்தேன். இதைக்கற்றறிந்த பெரியாரும், மற்றவரும் நான் சொல்வதிலிருக்கும் குற்றங்களை நீக்கி குணத்தைக் கைக் கொள்வீர்களென்று நம்புகிறேன்.

மனிதர்கள் யாரிடத்தில் அன்பு வைக்கிறார்கள்? உற்றார் உறவினரிடத்திலும் இன்னும் உள்ள தாய் தகப்பன் சகோதர சகோதரிகள்முதலியவர்களிடத்திலும்! சிநேகிதர் என்பவர்களிடத்திலும் எவ்வளவு தூரம் தான் செய்த நன்மையோ, தீமையோ கஷ்டமோ சுகமோ இவைகளை உள்ளது உள்ளபடியே சொல்லிக் கொள்கிறார்களேயல்லதுமற்றவரிடத்தில்சொல்லமனம்இடந்தராது ஒரு மனிதனுக்கு ஆணோ பெண்ணோ எதுவாயிருந்த போதிலும் ஒரு நேசப்பான்மை யுடையவர் இல்லையெனில் அவர் பூலோகத்திலிருப்பதே அனாவசியம் என்று தோன்றுகிறது எப்படியெனில் தனக்கு கஷ்டம் வந்த காலத்தில் தன் பாங்கனுடனுரைத்து அவன்சொல்லும்சமாதான மொழிகளால் தன் மனதை ஆற்றிக் கொண்டும் சந்தோஷம் நேர்ந்த விடத்து அதைத் தன் நண்பனிடம் சொல்லி தான் ஏற்கெனவே அனுபவித்த ஆனந்தத்தைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாய் அனுபவித்தும் வருவது யாவரும் அறிந்த விஷயம். உதாரணமாக சிந்தாமணியில் ஓரிடத்தில் 'தனியவராகிவாழ்தல் சாதுயர் அசனில்லை." என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வித உயிர்த்தோழன் அல்லது தோழி கிடைப்பது அசாத்தியமென்றே தற்கால நிலைமையில் எண்ணவேண்டியிருக்கிறது. உண்மை அன்பும் அதின் இலக்ஷணங்களும் புஸ்தகங்களில் பார்த்து களிப்படைந்தால் தான் அடையலாம். மனிதர்களிடத்தில் காண்பது மிகவும் துர்லபம். ஒருக்கால் அப்படியேயிருந்த போதிலும் ஸ்திரீ புருஷர்கள் என்ற மாறுதல்பிறப்பினரிடத்தில் ஒரு வேளை அபூர்வமாயிருந்த போதிலும் ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளும் ஆடவர்களுக்கு ஆடவர்களுமாவது சிநேகமாயிருப்பதும் கிடையாதென்றே சொல்லலாம். மேற்கண்ட ஸ்திரீபுருஷ சிநேகம்கூட "கோவையார்" முதலிய காவியங்களில் சொல்லியிருப்பதுபோல் தன்னையேமறந்து இருவர்களும் தன்னுயிரினும் அதிகமாய்நினைத்து நேசிக்கிறார்களாவென்பது சந்தேகமே. அவ்விதம் ஒருவர் நேசிக்கிறதாயிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அறம்பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களில் மூன்றாம்பதவி நான்காம் பதவியாகிய இன்பம் வீடு இரண்டும்மேற்படியாருக்கே சொந்தம்.

மேற் சொன்ன கோவைகளில் தலைவன் தலைவி யிருவர்களும் தம் மனோ நிலைமையை தம் தம் தோழரிடத்தில் எடுத்துச் சொல்வதைப் பார்க்கும்போது அன்பின் சக்தி எவ்வளவு தூரம் ஆட்டி வைக்கும் என்பது விளங்குகிறது. தோழி தலைவியைப்பார்த்து 'உன் தலைவனைப் பற்றி நினைத்து இவ்வளவு கஷ்டப்படுகிறாயே ஒரு வேளை அவர் உயிருடன் இருக்கிறாரோ என்பதே சந்தேகிக்கும் படியாயிருக்கிறதே' என்ற சொல்ல தலைவி 'என்னுயிர் சாட்டிற்றில்லையா? அதாவது யான் உயிருடனிருக்கும் போது அவர் எவ்விதம் இறத்தல்கூடும்? அவர் இறந்திருக்கும் பட்சத்தில் என்னுயிரும் நீங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் அவர் உயிருடனிருப்பது நிச்சயம். ஏதோ காரணத்தால் வருவது தடைபட்டிருக்கிறது. அதனால் பாதகமில்லை. நானே அவ்விடம் போகலாமென்று நினைக்கிறேன்" என்று தலைவி சொல்ல, தோழி "எண்ணித் துணிககருமம் துணிந்தபின் எண்ணுவதென்பது இழுக்கு" என்னும் நாயனார் வாக்கை ஞாபகமூட்டி "நீ இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய் விட்டால் திரும்பவும் இவ்விடம் வரமுடியாது. எங்ஙனமெனில், அவ்விடத்திற்கு போய் உன்னை மேற்படியார் அங்கீகரிக்காவிட்டால்மேற்கண்ட விதமாய் இங்கு வந்தால் தற்காலமிருக்கும் நிலைமை கெட்டுவிடும்' என்று தோழி சொல்ல, "அடி பைத்யக்காரி! உனக்குத் தெரிந்தது எனக்குத் தெரியாதா? அவர் மறுத்துவிட்டால் எனக்கு இவ்விடத்தில் என்ன காரியம். அவர் கருத்தை அறிவேன். அறிந்த பின் அந்தகனாருக்கு வழிப்படுவேன்" என்றுசொல்ல, தோழி "அம்மா நீ யிவ்வளவு அவசரப்பட்டு எதையும் முடித்து விடுகிறாயே! ஏற்கனவே நீ பல காலம் பொறுமையுடனிருந்து வந்திருக்கிறாய், இப்பொழுதேனிவ்வளவு பதட்டம்" என்றனள். அதற்கு தலைவி அதற்குக் காரணந் தெரியாதா சொல்கிறேன் "ஒரு நாள் வருவாரென்றேயிருந்தென்னாவியுடலகத்தே" என்று மறுமொழி கூறியிருக்கிறாள். மறுபடி தோழியைப்பார்த்து "நீ யேதேதோ சொல்கிறாய். அவையெல்லாம் எனக்கு எவ்விதமான சமாதானத்தையும் தாராது? உதாரணமாக உலகில் அன்றில் பறவையை அன்பிற்கு உவமையாய் சொல்வது வழக்கம். எவ்விதமெனில் அந்தப் பறவை இரண்டு முட்டையிட்டு அது ஒன்று ஆணும் மற்றொன்று பெண்ணுமாயிருக்குமாம். அதிலிருந்தே ஒன்றை ஒன்று விட்டுப் பிரியாமலிருந்து பறக்கும்போதும் ஒன்றின் கழுத்தில் மற்றொன்று மாட்டியதுபோல் பறந்து கீழே மேயுந்தருணத்திலும் அதிக தூரம் போகாமல் கூடிய வரையில் சமீபத்திலேயே யிருந்து மேய்வது வழக்கமாம். அப்படியிருந்தும் அகஸ்மாத்தாய் ஒன்றுக்கு அபாயம் நேரிட்டு விட்டால் மற்றொன்று மூன்று தரம் கூவி அதற்குள் அது வராத பட்சத்தில் இந்தப் பறவை தன் வயிறு நிறைய கல்லைப் பொறுக்கி விழுங்கி தன்னால் எவ்வளவு தூரம் உயரப் பறக்கமுடியுமோ அவ்வளவு தூரம் போய் தன் இறகை மூடி பூமியில் விழுந்து மரணமடைந்து விடுமாம். அதுவே யெனக்குப் பிடிக்க வில்லை. ஏனென்றால் ஒரே சப்தத்தில் வாராதவரையில் மறுமுறை ஆடவென்ற மட்டும் உயிர் நிற்குமோ என்றே எனக்குத்தோன்றுகிறது. இன்னமும் சொல்லப்புகின் 'நாண வொண்ணாக் கவி கோடிச் சுரேசர் நளிர்வரைமேல்—காணவொண்ணாது செல்லோர் தமைகாணில் கலந்திடன்பு—பூணவொண்ணாது பூணிற் பிரிவு பொருந்தவொண்ணாது—வணவொண்ணாத பிரிவுரின் ஆவி பின் எந்திழையே' என்ற பாடலையும் நீ காதிற்கூட கேட்டிராய் போலும்" என்று தோழியைப் பார்த்து தலைவி சினந்து கூறினாள். இவ்வித அன்பின் பெருமை கோவைகளில் தலைவன் தலைவிக்கே சொல்லியிருக்கின்றது. அது மற்றவர்களுக்குப் பொருந்தாதென்று சிலர் நினைக்கலாம். அதற்கும் பல உதாரணங்களிருக்கின்றன. தமிழில் "தேசிங்க ராஜன் கதை" ஆங்கிலத்தில் "ஜான் ஹாலிபாக்ஸ்" (John Halifax) என்னும் அநேக நூற்களிருக்கின்றன.

ஆகையால் பூர்ணமான அன்பு ஒரு ஆண் மகனிடமோ அல்லது அல்லது பெண்மகளிடமோ இருந்தால் அவர்களுக்கு. உலகமே வசியமாய் விடுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. மற்றும் யோசித்தால் ஒவ்வொரு ஆண்மகனையும் பத்து மாதம் சுமந்து எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகி பெற்ற பிறகும் இராப்பகல் நல்ல தூக்கமில்லாமலும் உணவு முதலியவைகளை துறந்தும் இன்னம் எண்ணிறைந்த கஷ்டங்களை அனுபவித்தும் பெண்மக்கள் இவ்வளவு புருஷர்களையும் பெற்று வளர்த்து உலகத்தை நிரப்பி யிருக்கிறார்களே யல்லது ஒரு ஆண் மகனாவது ஏதோ சில ஆண் குழந்தைகளையாவது பெறவு மில்லை. வளர்க்கவு மில்லை. அப்படி யிருக்க தீட்டின மரத்தில் கூர் பார்ப்பது போல், இவர்களை நாளிது பரியந்தம் போஷித்து வரும் எங்கள் கூட்டத்தாரிடம் நிர் தாட்சண்யமாக வாய்ச் சொற்களாலும் நடத்தையாலும் சற்றும் இரக்கம் பாராட்டாமல் செய்து வரும் செயல்களை எதை யென்று எழுதுவது? ஆதியில் வெளி நாட்டார் அரசாட்சி புரிந்த காலத்தில் பத்து வயதுக்கு மேற்பட்ட அழகுவாய்ந்த பெண்களை துராக்கிரகமாய் தூக்கிக்கொண்டு போவார்களாம். அதற்காக நம்மினத்

தார்கள் ஒன்றுகூடி பத்து வயதுக்குள் சிறுமிகளுக்கு கலியாணம் செய்து விடவேண்டுமென்று தீர்மானித்து அந்தப்படியே நடத்தி வந்தனரென்று தெரிகிறது. இதோடு புருஷனையிழந்த ஸ்திரீகளுக்கு தலைமயிரெடுத்து கோரரூபமாக்கிவைத்தார்களென்றும் தெரிகிறது. இப்பொழுதோ அவ்வித நிர்ப்பந்தம் ஒன்றுமில்லாமலிருந்தும் அந்தப் பழமைகளை விடக்கூடாதென்ற எண்ணம் நம்மில் பலருக்கு தோன்றி சமயம் வந்த பொழுது அதைப் பிரசங்க மூலமாயும் இன்னம் இதர வழிகளிலும் பரவச்செய்து வருகிறார்கள். இது நிற்க, பெண்கள் சுமார் பதிமூன்றுவது வயது தவறினல் பதினைந்தாம் வயதிற்கு அதிகப்படுவதற்குள் ஒரு பெரிய சமுசாரத்தில் அகப்பட்டு சமுத்திரத்தில் அலையில் அகப்பட்ட துரும்புபோல அவர்கள் தத்தளித்து படும் பாட்டை என்னென்று எழுதுவது.

தற்காலத்திலும் உயர்தரக் கல்விகற்ற ஆண் மகனும் பெண்களை மிருகத்தினும் கடையாய் நினைத்து அவர்கள் எவ்வளவு குற்றேவல் செய்து தன் புருஷனை திருப்தி செய்ய நினைத்த போதிலும் ஒரு முகாந்தரமுமன்னியிலோ வெளியில் போய் வந்த இடங்களில் நடந்த சமாதானக் குறைவான காரியங்களை மனதில் வைத்துக்கொண்டோ வீட்டிலிருக்கும் தன் மனைவியை அடித்தும் வாயில் வந்தபடியெல்லாம் வைதும் மனதை ஆற்றிக் கொள்கிறார்கள். அச்சமயத்தில் பிறர் கஷ்டத்தைப் பார்த்து மனம் சகியாத சுபாவமுள்ள ,ஆரேனு, பெண்ணோ மேற்கண்ட துராத்மாக்களை 'ஏனையா பாவம் அலையாகிய ஸ்திரியை அடித்துத் துன்புறுத்துகிறீர்' என்று வினவினல் "என்ன உலகில் யாரும் செய்யாத செய்கையை நான் செய்து விட்டேனு. என் தகப்பன் பாட்டன் முதலியவர்கள் தன் மனைவிகளை எவ்வளவு துன்புறுத்தினர்களோ அதில் பாதி கூட நான் செய்வதாக எனக்கு தெரியவில்லை" யென்று மறுமொழி சொல்லுகிறார்கள். தற்காலம் எவ்வளவோ நாகரிகமும் கல்வியபி விருத்தியமடைந்திருப்பதோடு மேல் நாட்டாருடைய பழக்கங்களை கண்டு வரும் நாம் இவ்வித நாகரிக மற்ற காரியங்களைச் செய்வது மானக்கேடென்று நினையாத ஆடவர்கள் அநேகரை பூமி பொறுமையுடன் சுமப்பது வியப்பே.

'பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்று தெய்வப் புலமை வாய்ந்த பெரியார் மொழிந்திருப்பதை மறந்தார்கள் போலும் ஆனல் ஆண் மக்கள் தங்கள் சொந்த விஷயங்களில் தற்கால நாகரிகத்துக்கு தகுந்தபடி மாறுதலடைந்திருக்கின்றனர். தங்களுக்குமதக்கட்டுப்பாடுகள் முதலிய பல விஷயங்களில் சிறிது கஷ்டம் ஏற்படுமாயின் அதை அப்பொழுதே நிவர்த்திசெய்ய வேண்டி பல வழிகளில் புகுந்து பரிகாரம் தேடுகிறார்களேயல்லது பெண்களைப்பற்றி கிஞ்சித்தேனும் ஆலோசிக்க நேரமில்லாமலோ அல்லது மற்றெவ்வித காரணத்தினலோ யோசனு புருஷத்துவமுடைய அநேக புத்திமான்கள் சும்மாயிருந்து வருகின்றனர்.

ஆனல் இனிமேல் கருணைக்கடலாகிய ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் செய்துவரும் பிரசங்கம் முதலிய பல வழிகளில் ஸ்திரீகளை பழைய பிரகாரம் காலில் மிதித்து அடிமையாக்க சாத்தியப்படாதென்றே நினைக்கிறேன். இருந்தபோதிலும் அவரைப் போல் இன்னம் பலர் சேர்ந்து முயற்சி எடுத்தால் சீக்கிரம் மேற்படியார்களுக்கு வேண்டிய சுதந்திரங்கள் கைகூடும். அவ்விதமே பலர் சேர்ந்த போதிலும் மேற்படியாரைப்போல் அகமும் புறமும் ஒரேமாதிரியாயிருந்து ஒற்றுமைத்து உங்களில் ஒரு பகுதியினராகிய ஸ்திரீகளை முன்னேற்றமடையும்படி செய்வீர்களென்று நம்புகிறோம்.

## காலஞ் சென்ற ஸ்ரீமான் கடவாத்தியம்சுந்திரமய்யர் அவர்களின் பிரிவாற்றுமை.

காஞ்சீபுரம் ஸங்கீதவித்வான் சி. சுப்ரமண்ய பிள்ளை அவர்களின் மைத்துனரும் காஞ்சிபுரம் முனிசிபல் கௌன்சிலருமான வி. பங்காருபிள்ளை எழுதுவதாவது.

காலஞ்சென்ற ஸ்ரீமான் கடம் சுந்திரமய்யர் அவர்கள் சங்கீதத்திலும் குணங்களிலும் நடையுடை பாவனைகளிலும் மிகவும் மேம்பட்டவர் என்பதை எந்த வகுப்பாரும் ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க நமது அய்யாவர்களின் அகால மரணத்தைக் குறித்துசுதேசமித்திரனில் 5-4-28 ல் 10 வது பக்கத்தில் 4 வது பத்தியில் நமது நண்பர் ஸ்ரீமான் சி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் எழுதியிருக்கும் வியாசத்தில் கண்ட சிலவிஷயங்களைக்குறித்து அதை வாசித்த நேயர்கள் வியப்படைந்திருக்கமுடியாதென்றே நினைக்கின்றேன். ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் எழுதியிருக்கும் வியாசத்தில் 'தற்காலத்தில் சங்கீத உலகத்திலும் ஜாதித்துவேஷம் மதத்துவேஷம் புகுந்து தலைவிரித்தாடுகிறது' என்று ஒப்புக கொண்டு விட்டு இதன் கருத்துப்படி காலஞ் சென்ற ஸ்ரீமான் அய்யரைப் பற்றி ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் எழுதியிருப்பதற்கு நாம ஆச்சரியப்பட வேண்டிய அவசியமேயில்லை. அவர் எழுதியிருப்பதாவது காலஞ் சென்ற ஸ்ரீமான் அய்யரவர்கள் ஜாதி பேதமில்லாதவரென்றும்நாராதராகத தோன்றினவரென்றும், காலஞ்சென்ற ஸ்ரீமான் அய்யருக்குப் பிறகு அந்தஸ்தானத்திற்கு ஒரு பார்ப்பனரே வரக்கூடுமென்றும், வேறெவரையும் சொல்ல முடியாதென்றும் எழுதி இப்பொழுதே கடவாத்திய நிபுணத்துவம் ஒரு பார்ப்பனருககே மேற்படி ஸ்ரீமான் சி. ஆர். அய்யங்கார் அவர்கள் இளவரசுப் பட்டம் கட்டி விட்டார். ஜாதி பேதமிருக்கக் கூடாதென்று எழுதிவிட்டு இதற்கு நேர் விரோதமாக ஸ்ரீ அய்யங்கார்நடந்துகொண்டு வருவதைப் பார்த்தால் "ஆக்மஸ்துதி, திரவியாபேக்ஷை,பரநிந்தை, ஆகியவைகளை வெறுத்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம படித்த வித்வானுகிய எனக்கும இரண்டுணு,ஒன்றுந் தெரியாத தற்குறியாகிய இவனுக்கும் இரண்டணுவா" என்று கேட்பது போல் இருக்கிறது.

## அ. பா. ச. சங்கம்.

### அத்தாட்சி ரத்து செய்யப்பட்டது.

திருப்பூரைச் சேர்ந்த விஜயாபுரம் ஸ்ரீ ஆர். டி. முத்துசாமி செட்டியாருக்கு மேற்படி சங்கத்தாரால் கதர் உற்பத்தி செய்வதற்காக அளிக்கப்பட்ட அத்தாக்ஷிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டதென்று கதர் அபிமானிகளுக்கும் கதர் வியாபாரிகளுக்கும் அறிவிக்கப்படுகிறது. காரியதரிசி.

## திருவாளர் பி. டி. ராஜன் அவர்கள் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வது.

எனது சிறிய தகப்பனர் திருவாளர் உத்தமபாளையம் எம். டி. சுப்ரமண்ய முதலியார் அவர்கள் காலஞ்சென்றமை குறித்து எனக்கு அநுதாபச்செய்திகள் அனுப்பிய பந்துக்களுக்கும் மித்திரர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் எனது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதுடன் அவர்களுக்குத் தனித்தனியே வந்தனமளிக்க இயலாமை குறித்து வருந்துகிறேன்.

இங்ஙனம். பி. டி. ராஜன், மதுரை.

## பத்திரிகையில் மது பிரசாரம்

### மலாய்நாட்டிலிருந்து 'ஓர் இந்திய வாலிபன்' எழுதுவது.

இம்மலாய் நாட்டில் உலவி வரும் சில தமிழ் பத்திரிகைகள் அறிந்தோ அறியாமலோ ஏழை மக்களின் எளிய நல்வாழ்க்கைக்கு பங்கம் வருவிக்கும் விளம்பரத்துடன் வெளிவருகின்றன. அதென்ன வெனில் "டி,பீர். பிரிட்டிஷாருடைய உயர்ந்த சரக்கு. இதுவே பானமும் ஆகாரமுமாகிறது" எனவும் மற்றும் ஸ்டவுட் முதலிய மதுபானத்தின் குணங்களைப் பற்றியும் உயர்வாக விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது.

45 காசு அல்லது 50 காசு சம்பளம் வாங்கும் ஏழை மக்களை பிச்சை எடுத்து வயிறு வளர்க்கும்படி செய்ய எற்கனவே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் கள்ளுக்கடைகள் ஏராளமாய் இருக்கிறது இது ஒருபக்க மிருக்க இந்திய மக்களின் முன்னேற்றத்தை கருதியே உழைக்க இருக்கிறேமென சொல்லிவரும் பத்திரிகைகளிலும் அவர்கள் எளிய வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய விளம்பரங்கள் வெளிவருவதானது மிகவும் வருந்தத்தக்கது.

காந்தியடிகள் தமது யங்இந்தியாவில் குடியை விளம்பரப்படுத்தும் எந்த பத்திரிகையையும் ஆதரிக்க கூடாதென எழுதியதை வாசித்த ஞாபகமிருக்கிறது.

ஆனதால் தாங்கள் ஷை பத்திரிகைகள் இந்திய மக்களிடையே அவர்கள் வாழ்க்கைக்கு உகந்த விதமாயும் அவர்கள் முன்னேற்றத்திற்கு அத்யாவசியமாய் வேண்டுவனவாயுமுள்ள விஷயங்களால் [illegible] ஷை பத்திரிகைகளுக்கு. போதிய [illegible] வீர்களென நம்புகிறேன். தங்களின் [illegible] எண்ணிறந்த வேலைகளுடன் என் [illegible]த்தையும் பெற்று வேண்டுவன செய்ய வேணுமாய் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## கோலார் ராபர்ட்சன் பேட்டை ஜீவகாருண்யசங்கம்.

இது சார்பாய் இவ்வருடம் எல்லா விடங்களுக்கும் பிரசாரகர்களை அனுப்பி கொலை மறுத்தற் பிரசாரம் மிக மிக தீவிரமாக நடத்துவதென கோலார் தங்கவயல் ஜீவகாருண்ய சங்கத்தினர் தீர்மானித்திருக்கிறார்கள். ஏராளமான பிரசுரங்கள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன.

வேறு பலசிறப்பட்ட முயற்சிகளும் கையாளப்படுகின்றன வாதலால், ஆங்காங்குள்ள அபைர்கள் கொலையோடு கூடிய பொங்கல்கள் நிகழுமிடங்களையும் தேதிகளையும், மற்ற விபரங்களையும் சங்கக்காரியதரிசிக்கு தயவு செய்து அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர். காரியதரிசி.

## கண்ணாடி என் செய்யும்?

மூக்கறுக்கப்பட்ட ஒருவன் கண்ணாடியைப்பார்த்து அது தன முக்கிய அங்கத்தின் ஓர் பாகத்தை ஊனப்படுத்திக் காட்டுகிறதென்று கண்ணாடியின்மேற்கோபித்துக் கொண்டு அதைக் கல்மீது போட்டுடைத்தானென்று ஒரு கதை சொல்லவதுண்டு. அதைப்போல் ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களும "குடியரசு" பத்திரிகையும், நம் நாட்டில் மதத்தின் பேராலும்சுவாமிகளின் பேராலும் ஒருவரை ஒருவர்கொடுமைப்படுத்தியும், அடிமைப்படுத்தியும் வருவதையும, அதனால் நம் பாரதநாடு முழுமையும் அன்னிய நாட்டுக்கு அடிமைப் பட்டுப் போனதையும் உள்ளதை உள்ளவாறு தெள்ளிதினுணரும் வண்ணம கூறி வருவதைக் கண்டு பார்ப்பனர்களும அவர்களுடைய கூலிகளும் "குடி அர"சைக் கோபித்து திரு நாயக்கர் மேல் பாய்கின்றனர். சில பத்திரிகைகளும் அதை ஒத்து ஓலமிட்டு வருகின்றன. திரு நாயக்கர் என் செய்வார்! "குடி அரசு" என் செய்யும்!!

'எண்பொருளவாகச் செலச் சொல்லித் [தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பதறிவு'

எனும் முது மொழியை அறியாது "குடி அர"சைக்கோபிப்பதும, திரு நாயக்கர்மீது பாய்வதும் அறியாமையன்றோ?

"நீசமும் பாவமும் நிறைந்த தொழிலைச் செய்யும் ஒருவன் பிராமண குலத்திற் பிறந்தானென்பதற்காக அவனைச் சாமி யென்று கும்பிட்டு அடிமைப்படாதே" யென்றுசொல்கிறது "குடிஅரசு" "வேசிகளையும் தாசிகளையும் வேண்டியமட்டும் வைத்துக் கொண்டு காசு பணம் சம்பாதிப்பதற்குறைவிடமாயுள்ள ஆபாசமுள்ள கோயில்களுக்குப் போகாதே" என்று தான் திரு நாயக்கர் சொல்கிறார். "மனிதனை மனிதன் தீண்டக் கூடாது; நாயும் கழுதையும், பன்றியும்,பூனையுங் கூட நடக்கும் தெருவில் மனிதன் நடக்கக்கூடாது; மனிதன் படிக்கக்கூடாது; படிப்பதைக் கேட்கக்கூடாது; ஒருவன் ஒருவனுக்குத் தரவேண்டிய கடனைத் தராமல இறந்து போனால் அவன் மறு ஜென்மத்தில் கடன் கொடுத்தவனுக்குப் பிள்ளையாகவந்து பிறந்து உழைக்க வேண்டும்; ஆனால் பிராமணனுக்கு எல்லாரும் உழைத்துக் கொடுக்க வேண்டும், கொடாதவனுக்கு நரகம் தான் கிடைக்கும்; பிராமணன் பிறர் சொத்தை பலாத்காரமாக எடுத்துக் கொண்டாலும் தோஷமில்லை" என்றிவ்வாறு இழிவுநிறைந்த எந்தச் சாஸ்திரங்களையும் நம்பாதீர்கள்; படியாதீர்களென்று பகர்கிறது "குடி அரசு" "மதத்தின் உண்மையாதென்பதை உணராமல் மதம் மதம் என்று கூறும் கொடுமைகளையும் குருட்டுத்தனமாய் நம்பாதீர்கள்" என் தான்கூறுகின்றார் திரு நாயக்கர். "மூட நம்பிக்கைகளையும் மூடாராதனையையும் விட்டு உண்மையுணருங்கள்; உறுதியுடன் நில்லுங்கள் அறிவுடையாராகுங்கள்" என்று நாயக்கர் கூறுகின்றார்; "குடி அரசு"ம் கூறுகிறது.

தேச சமூக முன்னேற்றங்களுக்குப் பாடுபடும் எல்லாப் பத்திரிகைகளும் அவ்வாறே பகர்கின்றன. எல்லாத் தேசாபிமானிகளும் அவ்வாறு தான் பகர்கின்றார்கள். சந்தேகமுள்ளவர்கள் 28-3-28 ல் வெளிவந்த "நவசக்தியின் தலையங்கத்தைப் படித்துப் பார்க்கட்டும். அதைப்படித்து நன்குணர்ந்தவர்கள் உண்மை யுணர்வார்கள், சமயத்தின் பேரால் செய்யும் கொடுமைகளைக் கற்றறி மூடர்களும் விட்டொழிக்கும் வண்ணம் நுண்ணறிவால் தீட்டப் பட்டிருக்கிறது "நவசக்தி"யில்கற்றோரும், மற்றோரும் கண்டுணரும்படி சுத்த வெள்ளையாய்க் கூறுகிறது. "குடிஅரசு" யாடென்றாலும் பசுவென்றாலும் ஒரு பொருட் கொண்ட வார்த்தை தானென்பதை அறிவுடையார் ஒப்பவே செய்வார். மதுரையில் நாடார் மகாநாட்டில் தலைமை வகித்த ஸர். சதாசிவ ஐயர் "நாடார்களை வரவிடாமற்றடுத்து வைக்கப் பட்டிருக்கும் கோயில்களிலெல்லாம் சுவாமிகளிருக்க யோக்கிதை கிடையாது; பிசாசுகள்தானிருக்கக்கூடும்; அக் கோயில்களைக் கண்ணாற்கூடப்பார்க்காதீர்கள்" என்றுசொல்லியிருக்கிறார். வைதிகர்களுடைய அறிவிலாச் சுயநலத்தால் இந்து மதம் செல்லரித்துப் போய் விட்டதென்று சொல்லியிருக்கின்றார் சுவாமி விவேகானந்தர். சமீபத்தில் செட்டிநாட்டுச்சுற்று பிரயாணத்தில் 'தற்போதுள்ள கோயில்களெல்லாம் தாசி வீடுகளுக்குச் சமானம்" என்றார் மகாத்மா காந்தி. இந்திர விழா வென்னும் ஏமாற்றத்தைத் தவிர்த்து வைத்தார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. யாகமென்னும் பெயரால் அரசர்களையும் பிரபுக்களையும் ஏமாற்றி ஆடு குதிரைமுதலிய ஜீவர்களைக் கொன்று தின்னும் கொடுமைகளைத் தவிர்த்தார் புத்த பகவான் ஒவ்வொரு மனிதனும் தினமொரு விக்கிரகத்தைச் செய்து வணங்கி அரேபியா வெங்கும் மனிதர் வசிக்க இடமில்லாமல் எங்கும் விக்கிரகமாய்க் குவிந்து போகக்கூடிய மூடர் காலத்தை அங்கு முற்றும் போக்கினர் முகமது நபி. சாத்தானைத் தெய்வமாக வணங்கும் வழக்கத்தைத் தவிர்த்தார் ஏசு கிறிஸ்து நாதர். இவ்வாறொவ்வொரு காலங்களிற் றோன்றிய மகான்களெல்லாம் மக்கள் மனமயக்க மொழிப் பலஇயக்கங்களை யுண்டு பண்ணிக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது போல் திரு நாயக்கரும் மக்கள் நல்வாழ்வெய்துவதற்குரிய பல வழிகளைக் காட்டுவதிற் குற்றமொன்றில்லை. ஆகையால் மூக்குக் குறைக்கு கண்ணாடி என் செய்யும்? எனக் கடாவுகின்றோம்.

'நாடார் குலமித்திரன்.'

---

## பினாங்கு மருத்துவகுல சங்கம்.

தலைவர் ஸ்ரீ ம. ரு சொ. ஏகாம்பரம பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் ஷை சங்கத்தில் (11—5—28)ல் 2-வது மகாநாடு நடைபெறும். கனவான்கள விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வரவேற்புத் தலைவர்.

---

## திரு. நாயக்கரின் போர் எதற்கு?

இன்று பிறிதோரிடத்தில் திருவாளர்களான ராமசாமி நாயக்கர், சனக சங்கர கண்ணப்பர், தெண்டபாணி பிள்ளை ஆகிய மூன்று தலைவர்களின் சொற்பெருக்கை பிரசுரித்திருக்கின்றோம். அவற்றிலிருந்து இப்பொழுது நம் தமிழ் நாட்டில் நடைபெறும் திரு. நாயக்கரின் போர் உத்தியோக வேட்டைக்கா அல்லது சாதி என்னும் பேயை ஒழித்து சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கா என்பது எளிதில் விளங்கும். ஆனால், பல பிராமணர்களும் அவர்களால் செல்வம் படைத்து புகழ்படைத்து வாழ வேண்டுமென்று நோக்கங் கொண்டுள்ள அவர்களின் தாசர்களும் பார்ப்பனரல்லாதாரியக்கம் உத்தியோகத்திற்காக ஏற்பட்டது என்று பிதற்றிவருகிறார்கள். திரு நாயக்கரின் மொழிகளை உற்று ஆராயும் எந்த அறிவில்லா மூடனுங் கூட இவ்வியக்கத்தின் தூய்மையை நன்கு அறிந்து கொள்ளக் கூடும். எவ்வித மேன்மையையும் யோக்கியதையு மில்லாமல் ஒருவன் தன்னையும் தன் இனத்தையும் புத்திசாலிகளாகவும் உயர்ந்தவர்களாகவும் கருதுவதும், மற்ற இனத்தவர்களை எல்லாம் மடையர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும், கருதி செருக்குடன் ஏமாற்றி வாழ்ந்து வருவதை எந்தச் சுயமரியாதை கொண்ட வீரனும் விரும்பமாட்டான். திரு. தெண்டபாணி பிள்ளை கூறியுள்ளதைப் போன்று எச்சிற்கோப்பையைக் கழுவுபவனையும், காலிகளையும் அயோக்கியர்களையும் கோவிலில் இருக்கும் விக்கிரகத்தையும் வித்தியாசமில்லாமல் சாமி என்று அழைப்பது எவ்வளவு மானக்கேடானது என்பதை நாம் உணர்வதில்லை. பல அக்கிரமங்களும் பாதகங்களும் செய்து கொண்டு தாம் உயர்ந்தவர்களென்போரை மதிப்பதானது மூடர்களின் செய்கையாகும் என்பதை நாம் கூற வேண்டுவதில்லை. இவ்விதமாக இறுமாப்புடையோரை அடியோடு ஒழிக்காதிருக்கும், வரை நாட்டில சாதிச் சண்டைகள் வளர்ந்து கொண்டுதான் வரும். சாதி என்னும் கொடுஞ் சொல்லிற்கு ஆதாரம் எவர் என்பதைப்பற்றி நாம பின்னர் விரிவாக ஆராய்வோம். சமத்துவத்தை நிலை நாட்டத் தோன்றியுள்ள இப் போரை விடாது நடத்தவேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும்.

"தேச பக்தன்"

---

## ருஷியாவும் மதமும்.

ருஷியாவில் நிலைமையை நேரில் சென்று பார்த்து வரும் நோக்கத்துடன் ருஷிய தலைநகருக்கு விஜயம் செய்த அமீர் ஷாக்கிம் அர்ஸலனை தமது அபிப்பிராயத்தைப் பற்றி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது, "போல்ஷிக்கர்கள் சகல மதங்களுடனும் போராடுகிறார்கள்" அவருடைய அபிப்பிராயம் உண்மையானதே போல்ஷவிக்கியக் கொள்கையின் ஒரு முக்கிய லக்ஷியம் மதத்தைத் தொலைப்பதாகும்.

'அல்ஹிலால்'

## திருப்பத்தூரில்
# திருவாளர்
# ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

22—4—27 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை மெயிலில் ஈரோட்டிலிருந்து திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் திருப்பத்தூருக்கு வந்து சேர்ந்தார்.

ரயிலில் பல கனவான்கள் சென்று வரவேற்று தனி ஜாகைக்கு அழைத்து வந்தார்கள். காலை முதல் மாலை 4 மணி வரையில் உள்ளூர் பிரமுகர்களும் வெளியூர் பிரமுகர்களும் வந்து கண்டு பேசிப் போன வண்ணமாகவே இருந்தார்கள். சரியாக மாலை 4 மணி சுமாருக்கு பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலம் ஆரம்பித்து இந்து முஸ்லீம்கள் உள்பட சுமார் 600, 700 பேருக்கு மேலாகவே பின்தொடரசரியாய் 5 மணிக்கு மீட்டிங்கு ஏற்பாடு செய்திருந்த ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தது. ஏராளமான ஜனங்கள் முன்னதாகவே வந்து கூடியிருந்தார்கள். மீட்டிங்கு ஆரம்பிக்கும்போதே சுமார் ஆயிரம்பேர்கள் இருக்கலாம். பிறகு அரை மணி நேரத்திற்குள்ளாக ஏராளமானஜனங்கள்வந்துகூடிவிட்டார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமான கனவான்கள்.

குடியாத்தம்:—திராவிட சங்கக் காரியதரிசி வி ஆறுமுமுதலியார், ஜே அண்ணாமலை முதலியார், ஏ நாராயணசாமி முதலியார். வாணியம்பாடி:— க சி கந்தசாமி முதலியார், தா அப்பாதுரை முதலியார், சுயமரியாதை வாலிபர்கள் 15 பேர். அம்பலூர் — டி கரிய கவுண்டர், அர்ஜுண கவுண்டர், கே கந்தசாமி கவுண்டர், ராகவ கவுண்டர் இன்னும் 10 பேர். வெள்ளைகுட்டை.— வி சாம கவுண்டர்- புரம்,— ஆர் அருணாசல கவுண்டர். ஜோலார்பேட்டை:- ரயில்வே கண்டிராக்டர் வரதராஜு முதலியார், குப்புசாமி ரெட்டியார், ராமசந்திர ரெட்டியார். மடப்பள்ளி கிராமம்:— வஜ்ரவேலு கவுண்டர், கே குப்புசாமி கவுண்டர், பழனிமுத்து முதலியார். ஆதியூர் கிராமம்:—செல்வராயலு, கோ தா தபப முதலியார். திருப்பத்தூர்

அக்கிராசனதிபதி எஸ் வாத செட்டியார், மிட்டாதார் ஷண்முக செட்டியார், மண்டி எஸ் சுப்பராய செட்டியார், முனிசிபல் கவுன்சிலர் டி ஜி ஷண்முகவேலு பிள்ளை, தேசாய் செங்கல்வராய செட்டியார், மண்டி சி நாராயணசாமி செட்டி, ஜி பார்த்தசாரதி நாயுடு, டி. கே ரத்தனவேலு கவுண்டர், என் கிருஷ்ணசாமி நாயுடு, கி வேணுகோபால் நாயுடு, என் சுப்பிரமணி கவுண்டர், ஏ சின்னசாமிமுதலியார், ந சின்னு கவுண்டர், மண்டி பெ அ தருமு கவுண்டர், ஏ சாமண்ணா முதலியார், முனிரத்தன செட்டியார், ஏ கண்ணப்ப முதலியார், டி கே சுப்பிரமணிய கவுண்டர், என் ராஜகோபால் நாயுடு, பி சென்ன கேசவலு நாயுடு, ஜவுளி கடை எம் வெங்கடாசலபதி கவுண்டர், ஜவுளிகடை எஸ் வைத்யலிங்க கவுண்டர், மண்டி கே என் ராமசாமி கவுண்டர், கல்லரை கடை பெ மாசிலாமணி கவுண்டர், வி எஸ் பழனிசாமி முதலியார், எஸ் பொன்னுசாமி கவுண்டர், தி சி குப்புசாமி முதலியார், சூப்பர்வைசர் கோபால்சாமி நாயுடு, வா அ அரிகேசவ முதலியார், ராமச்சந்திர ராவ், ராசிபுரம் கந்தசாமி ஆச்சாரி. அமீனா ராஜகோபால் நாயுடு, அமீனா மாணிக்க முதலியார், டி ஏ ராமச்சந்திர செட்டியார், டி எஸ் சுப்பிரமணிய கவுண்டர், டி சின்ன கவுண்டா, மண்டி மு நடேசம் பிள்ளை, மண்டி க நாராயண செட்டியார், டி எம் பொன்னுசாமி கவுண்டர், உ தி வெங்கடாசலம் முதலியார் வி சாம கவுண்டர், டாக்டர் சீனி வாச முதலியார், பிராந்தி ஷாப் துரைசாமி நாயுடு, ஆனரெறி மாஜிஸ்டிரேட் டி என் அனுமந்த உபாஸகர், திருப்பத்தூர்

டி எம் லட்சுமிகாந்த அய்யர், வைத்தியம் விஸ்வநாத அய்யர், சந்திர அய்யர் இன்னும் சுமார் 10 பேர்வரையில்.

முஸ்லீம்பப்ளிக்சிட்டி போர்டுபிரசிடெண்ட் எம அப்துல் அஜீஸ் சாயபு, டெபுடி செக்ரடரி மலையாளம் இப்ராஹிம் சாயபு, ஜவுளிக்கடை ஆ கா ரஹிமான்கான் சாயபு பகதூர் ரஜாமியான் அப்துல்கப்பூர் சாயபு, வானகாற அப்துல் சுபான் சாயபு, ஆ ற இலியாஸ் கான் சாயபு, ஷராப்பு கடை கறிப் எஹியா சாயபு, மே ம அப்துல்சமத் சாயபு, கொண்டி அப்துல்சமக் சாயபு ஆனரரி மாஜிஸ்டிரேட் சாயபுபிருன் சாயபு பஹதூர், மண்டி ஆ ற அண்டுகோ சாப்ஜி சாயபு உள்பட இன்னும் சிலரும் சுமார் 1500 ஜனங்கள் வரை கூடி இருந்தார்கள்.

வாணிபம்பாடி, அம்பலூர், ஜோலார்பேட்டை. குடியாத்தம், ஆம்பூர் முதலிய இடங்களிலிருந்தும் சுற்றுப் பக்க கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் வந்திருந்தார்கள்.

சரியாய் 5 மணிக்கு மீட்டிங்கு துவக்கப்பட்டதும் தாலூகாபோர்டு மெம்பர் திரு எஸ் வாத செட்டியார் அவர்களை அக்கிராசனம வகிக்கும்படி முனிசிபல் கவுன்சிலர் திரு டி ஜீ ஷண்முகவேலு பிள்ளை அவர்கள் பிரரேபிக்க அம்பலூர் திரு கரிய கவுண்டர் அவர்களும் வாணியம்பாடி திரு கே சி கந்தசாமி முதலியார் அவர்களும் ஆதரிக்க சபையார் ஏகமனதுடன் ஒப்புக்கொள்ள திரு செட்டியார் அவர்கள் அக்கிராசனம் வகித்து திரு நாயக்கர் அவர்களைப் பற்றி சில புகழ் வார்த்தைகள் கூறி விட்டு திரு நாயக்கர் அவர்களுக்கு திருப்பத்தூர் மகா ஜனங்கள் சார்பாக மகாஜன சங்க காரியதரிசி ஒரு வாவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பிறகு நாயக்கர் வரவேற்பு பத்திரத்திற்கு சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு தமது உபந்யாசத்தை ஆரம்பித்தார். 5-15 மணி முதல் 9 மணி வரையில் பேசினார். பிறகு தலைவர் முடிவுரை சொல்ல திரு ஷண்முகவேலு பிள்ளை அவர்களும திரு கரிய கவுண்டர் அவர்களும் அக்கிராசனருக்கும், நாயக்கருக்கும் வந்தனம் செலுத்த சுமார் 10 மணிக்கு கூட்டம் கலைந்தது. வந்திருந்த ஜனங்கள் கடைசிவரை இருந்து கவனமாய் கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. ஒரு நிருபர்.

---

வைக்கம் வீரரும் "குடி அரசு" 'திராவிடன்' பத்திரிகைகளின் ஆசிரியருமான
திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
அவர்களுக்கு
## வரவேற்பு.

திருவளர் தெய்வச் செந்தாமரையின்
மருவரு பொய்கை மாமலர்சோலை
சீர்பெறவோங்கிச் சிறப்புற்றிலகும்
ஏர்பெறு நகராம் ஈரோடென்னும்
ஊரினிற் பெற்றோர் உஞற்றிய தவத்தால்
வந்தவதரித்து வாழ்ந்திடுமுயிர்கள்
நொந்திடுமாறு நோய் செயுந்தீய
அந்தணர் கொடுமை அகற்றிடவுன்னிச்
செல்வங்கள் யாவும் திரணமதாக்கி
மனுவெனுந்தர்ம மாகொடு நீதி
இயல்பெலாங்காட்டி யெவ்வெவர் மனமும்
தெளியுமா செய்து திரிந்திடு நாளில்
வைக்கமென்னும் வளம் பெறு நாட்டில்
பார்ப்பனர் செய்தபகொரணுக்கொடுமை
நீங்கிடுமாறு நிலைபெற நின்று
உயிரினையெண்ணா துறுதி புகன்று
பல்லோர் தாமும் பயன் பெறச்செய்த
தீரனே யிந்த திருப்பத்தூரில்
மழையிலையென்று கழறினமில்லை
பூண்டங்குறைவென விண்டனமில்லை
எல்லாக்குறைகளு மிடுக்கண் செய்கில
வக்கில் பார்ப்பனர் திக்கறுமக்களை
செய்யுங்கொடுமை செப்பத்தாமில
ஆதலினன்று தீதறு முனிவர்
அபயமென்ன அவர்குறை நீக்கும்
நேமியெடுத்த ஸ்ரீராமனென்ன
வருகவருக வள்ளால் வருக!
அவையிடையோங்க அண்ணலே வருக
திருகவாயுரை தாழ்மைகள் நீங்க
அன்றியுமொன்றிங் கறைகுதுங்கேண்மோ
பார்ப்பனரல்லாப் பண்புறுவக்கில்கள்
எற்புறப்பலரை யெங்களுக்குதவி
குறையது நீக்கிக் குகனருள் பெற்று
வையகமீதில் வாழியநன்கே
திருப்பத்தூர் மகா ஜனங்கள்

## ஈரோடு முனிசிபல் தேர்தல்.

திருப்பூர் ஸ்ரீமான் சுப்பிரமணிய செட்டியார் ராஜிநாமா கொடுத்த கோட்டை வார்டு கவுன்சிலர் ஸ்தானத்திற்கு 23-4-28 ல் தேர்தல் நடந்தது. ஸ்ரீமான்கள் ரு. அ. சுப்ரமணிய செட்டியாரும் E. O. C. முத்துசாமிக் கவுண்டரும் க. சிவராம முதலியாரும் கோட்டை கிருஷ்ண முதலியாரும் ஆகிய நால்வரும் அபேக்ஷகர்களாக நின்றதில் ஸ்ரீ செட்டியார்சார்பக சிலகவுன்சிலர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்ரீமான்கள் முத்துசாமிக் கவுண்டரும் சிவராம முதலியாரும் பின்வாங்கிக் கொண்டதால் ஸ்ரீமான்கள் சுப்பிரமணிய செட்டியாருக்கும் கிருஷ்ண முதலியாருக்கும் தேர்தல் போட்டி நடந்ததில் ஸ்ரீ செட்டியாருக்கு 211 ஓட்டுகளும் மற்றவருக்கு 22 ஓட்டுகளும் கிடைத்ததால் முன்னவர் வெற்றி பெற்றார்.

ஸ்ரீமான் செட்டியார் பொது ஜனங்களுக்கு அநுகூலமாய் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நிருபர்.

# ஜஸ்டிஸ்கக்ஷியும் ஸ்ரீ வரதராஜுலுவும்.

ஸ்ரீ வரதராஜுலு ஏப்ரல் 27தேதி 'தமிழ் நாடு'பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—

"ஜஸ்டிஸ் கக்ஷியார் செய்து வரும் தொல்லையால் தென்னாட்டு மக்கள் நோயுற்றிருக்கின்றார்கள்" ..........'ஜஸ்டிஸ் கட்சியின் ராஜீய நய வஞ்சகத்தை உடைத்தெறிய ஸ்ரீ வரதராஜுலு 12 வருஷங்களாக பாடுபட்டு வருகிறார்'

'நாயக்கர் பிரசாரம் இப்போது போலவே நடைபெறுமானால் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி இருந்த இடமே தெரியாமல் போகும்'

'தேசிய முற்போக்குக்கு ஜஸ்டிஸ் கக்ஷி ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது........'

'கேவலம் ஒரு சட்ட மெம்பர் பதவிக்காக தேசத்துரோகம் செய்தது ஒழுங்கா?'.

'பிராமணர்களை தேசியக்கூட்டத்திலிருந்து விலக்கிவிட நாம் ஒரு நாளும் சம்மதிக்க முடியாது........"

என்பதும் மற்றும் இது போன்றதுகளும் எழுதி ஜஸ்டிஸ்கட்சியை மிரட்டுகிறார்.

இவைகள் முழுவதும்வெறும்மிரட்டல்கள் என்று எல்லோரும் நினைப்பார்கள் என்பது ஸ்ரீ வரதராஜுலுவுக்கே தெரிந்திருந்தாலும பார்ப்பனர்களை ஏமாற்றுவதற்காகவும் தான் இப்போது பார்ப்பனர்கள் கட்சிக்கே முழுதும் வந்து விட்டதாக பார்ப்பனர்கள் நினைக்க வேண்டுமென்றும் நினைக்கும் பேதமையானது இதையெல்லாம் எழுதச் செய்கின்றது. ஒரு ஒற்றை மனிதனின் வயிற்றுப்பிழைப்பு என்னவெல்லாம் செய்யத் துணிவு கொடுக்கின்றது என்பதை எடுத்துக் காட்டவே இவைகளை நாம் எழுதுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியால் தமிழ் மக்களுக்கு என்ன நோவு வந்திருக்கின்றது என்பதை முதலில் காட்டி பிறகு அக்கட்சியில் வந்த நோவுக்கு அக்கட்சியைக் காட்டிக் கொடுப்பாரானால் அது ஆண்மையும் யோக்கியமும்பொருந்தின காரியமாயிருக்கும். ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒரு இயக்கம் தமிழ் நாட்டில் இல்லாதிருந்திருக்குமானால் தமிழ் மக்களின் யோக்கியதை இதுசமயம்என்னமாயிருக்கும் என்பதை யோசித்தால் ஒரு அறிவிலிக்கும் ஜஸ்டிஸ் கட்சியில் தமிழ் மக்களுக்கு நோய் உண்டாயிற்றா அல்லது ஸ்ரீ வரதராஜுலு போன்றார் பார்ப்பன வால்களாயிருந்து கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கு உள் உளவாயிருப்பதால் தமிழ் மக்களுக்கு சுயமரியாதை இல்லாததான நோய் உண்டாகிக் கொண்டு வந்திருந்ததா என்பது விளங்காமல் போகாது.

'12 வருஷகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின் 'நயவஞ்சகத்தை' உடைத்தெறிய ஸ்ரீ நாயுடு வேலை செய்தது' என்பது. வாஸ்தவமே ஆனால் அதுநாட்டின் நலத்திற்காகவா தனது சுயநலத்துக்காகவா என்பதை அறிய பொது ஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம். ஆனால் இவர் ஜஸ்டிஸ் கட்சியை வைதுஅதற்காகபார்ப்பனரிடம்கூலிவாங்கிக் கொண்டதல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியின் மீது ஒட்டியஒருசிறுதூசியையாவது அசைக்கமுடிந்ததா என்று கேட்கின்றோம்.

அன்றியும் அக்கட்சி ஒன்று இல்லாதிருந்தால் ஸ்ரீ வரதராஜுலுவை பூதக்கண்ணாடி கொண்டாவது காணமுடியுமா என்று கேட்கின்றோம்.

"நாயக்கர் பிரசாரம்இப்படியேஇருந்தால் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி இருந்த இடம் தெரியாமல் போய்விடு"மாம். போன தேர்தலில் ஸ்ரீ வரதராஜுலுவும் அவர்கள் தலைவர்களும் சேர்ந்தே ஒரு கை பார்த்தார்கள். தமிழ் நாட்டில் இந்த ஒன்றரை வருஷமாய் ஜஸ்டிஸ் கட்சியை எவ்வளவு தூரம் இருந்த இடம் தெரியாமல் செய்துவிட இவர்களால் முடிந்தது என்பதையும் பொது ஜனங்களே யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம், ஸ்ரீவரதராஜுலு போன்றவர்கள் இருந்தஇடம்தெரியகாங்கிரஸில்சிலர் ராஜீனமா கொடுத்து விட்டு ஜஸ்டிஸ் கட்சிக்கு விண்ணப்பம் போட நேர்ந்ததும் அதை அவர்கள் தள்ளும்படி செய்ததும் பொது ஜனங்களுக்கு தெரியுமா தெரியாதா என்று கேட்கின்றோம். தவிர நாயக்கர்பிரசாரத்தைக் கண்டுபயந்து ஜஸ்டிஸ் கட்சியை மிரட்டுவது எவ்வளவுஇழிதன்மைஎன்பதையும்யோசித்துப்பார்க்கவேண்டுகிறோம்.

"தேசிய முற்போக்குக்கு ஜஸ்டிஸ் கட்சி முட்டுக்கட்டையாயிருக்கின்றது" என்று சொல்லுவது, தேசீயம் என்றால் என்ன! அதற்காக யார் எந்தவிதமான பிரசாரம் செய்கின்றார்கள்? அதனால்ஏற்பட்ட பலன்என்ன? என்பதைப்பற்றி 'குடி அரசு' சுமார் ஒரு நூறு இருநூறு தடவை ஸ்ரீ வரதராஜுலு போன்ற வயிற்றுப்பிழைப்பு தேசீய வீரர்களை கேட்டிருக்கும், ஆனால் நாளிது வரை ஸ்ரீ வரதராஜுலுவாவது மற்றும் எந்தப் பார்ப்பனராவது தேசீயத்திற்கு வியாக்யானம் சொன்னவர்கள் அல்ல. அப்படியிருக்க ஜஸ்டிஸ்கட்சிதேசீயத்திற்கு முட்டுக்கட்டை என்பதுஏமாற்றுப் பிரசாரமா அல்லவா என்று கேட்கின்றோம்.

"ஒரு சட்ட மெம்பர் பதவிக்கு தேசத்துரோகம் செய்தது"என்பது. இதைப்பற்றி இதே மாதிரி பார்ப்பனர்களும் ஸ்ரீ வரதராஜுலுவும் இதற்கு முன்னால் போட்ட கூப்பாட்டிற்கு நீண்ட பதில் எழுதியிருக்கிறோம். அதற்கு சமாதானம் சொல்லாமல் மறுபடியும்அதை எழுதுவது பொதுஜனங்கள் பைத்தியக்காரர்கள்என்கின்றஎண்ணமே ஒழியவேறு என்ன என்று கேட்கின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் சட்டமெம்பர் பதவி ஒப்புக்கொண்டதில் தேசத்துரோகம் என்ன என்றும் திரு சர். சிவசாமி சர். சி. பி. சர். கிருஷ்ணசாமி, சர். ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீவெங்கட்டருமசாஸ்திரிஆகியவர்கள் ஒப்புக்கொண்டதில் உள்ள தேசபக்தி என்ன என்றும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். அப்படிக்கில்லாமல்தேசத்துரோகம என்றுஎழுதுவது வயிற்றுப்பிழைப்புக்காகச்செய்யும் இனத்துரோமே யல்லாமல் வேறு என்ன என்று கேட்கினறோம்.

"பிராமணர்களை விலக்க முடியாது" என்பதுஸ்ரீவரதராஜுலுவைபார்ப்பனர்கள்சேர்க்காவிட்டாலும் ஸ்ரீவரதராஜுலுவின்ஆயுள் வரை வரதராஜுலு பார்ப்பனர்களை விட முடியாது. என்பது பார்ப்பனர்கள் உள்பட எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆதலால் அதில் ஒன்றும் அதிசயமில்லை என்றே சொல்லுவோம்,

எனவே ஸ்ரீ வரதராஜுலுவின் இவ்வாக்கியங்களிலிருந்து அவர் எவ்வளவுதூரம் தனது சமூகத்தாரின் கேட்டுக்குத்தயாராயிருக்கின்றார் என்பது முதலியவைகளைவிளக்கவே இதை எழுதுகிறோமேயல்லாமல் மற்றபடி இவரது இம்மாதிரி பிரசாரத்தில் ஏதாவது விளைந்துவிடுமோ என்கின்றபயத்தினால் நாம் இதற்குசமாதானம் எழுத வரவில்லை என்பதையும் தெரிவிக்கின்றோம்.

---

# கோலாம்பூரில் பார்ப்பனர்தொல்லை

## பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சச்சரவுகள்


## 40 பார்ப்பனர்கள் கைதியாயினர்

நாசோபவதியில் ஏற்பட்டிருந்த பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சச்சரவுகள் சில தினங்களாக மிகுதிப்பட்டு தற்போது மிக நெருக்கடியான நிலைமைக்கும் வந்து விட்டதாகத்தெரிகின்றது. சில தினங்களுக்கு முன் நாசேர்பவதியிலுள்ள ஆலயமொன்றில் ஒரு பார்ப்பனனுக்கும் ஷிரோல் மாம்லித்தார் திரு. யாதவாவுக்கும் பூஜை மந்திரம் ஓதுதல் முதலிய குறைகளைக் குறித்து ஏதோ விவாதம் நிகழ்ந்து அதன் சம்பந்தமாகச் சச்சரவுகளும் ஏற்பட்டு அடிதடிக்கும் வந்து விட்டதாயும், பார்ப்பனர்கள் ஒன்றுசேர்ந்து மாம்லித்தாரை நாற்காலியிலிருந்து இழுத்துப்போட்டு அடித்து விட்டோடியதாயும் சொல்லப்படுகிறது. இதனைக்குறித்து இங்குள்ள பார்ப்பனரல்லாதாருக்குள் மிகுந்த பரபரப்புண்டாகி யிருந்தது. போலீசார் இத்தகைய போக்கிரித்தனம் செய்து குழப்பம் விளைத்த பார்ப்பனர்களைக் கைது செய்யமுயன்றபோது அவர்கள் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டார்கள். மற்றும் பல பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதரால் துரத்தியடிக்கப்பட்டபோது தப்பவழியின்றி நாசோபவதிக்கு அடுத்துள்ள குருந்துவாடுக்கு ஓட்டம் பிடித்தார்கள். பார்ப்பனரல்லாதார் அவர்களை விடாது துரத்திக் கொண்டு ஓடினார்கள். இச்சம்பவத்தின் காரணமென்னவாயினும் இதன்பலனாக இங்கு இவ்விரு வகுப்பாருக்கும் பெரும் கலகமுண்டாகி நகரம் அல்லற்பட்டு விட்டது. இதன் சம்பந்தமாகப் போலீசார் சுமார் 40 பார்ப்பனர்களைக் கைது செய்திருப்பதாகத் தெரிகின்றது. "திராவிடன்"

---

## 'தேவதாசன்'

முன் குறிப்பிட்டபடி 'தேவதாசனின்' கட்டுரையை பல காரணங்களால் இந்த வாரம் வெளியாக்க முடியாமல் போய் விட்டது, பின்னால்வெளியாகும்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஹூ சித்திரை-மீ 17-உ

## நமது பத்திரிகையின் நான்காவதாண்டு.

'குடி அரசு' பத்திரிகை தோன்றி இன்றைக்கு மூன்றுவது ஆண்டு கழிந்து நான்காவது ஆண்டு தொடங்கி விட்டது.

அது தோன்றிய நாள் முதல் இது வரை செய்து வந்த தொண்டைப்பற்றியும் அதனால் ஏற்பட்ட பலனைப் பற்றியும் பொது ஜனங்களுக்கு நாம் எடுத்துக்காட்டவேண்டிய தில்லை என்றே நினைக்கின்றோம்.

'குடி அரசின்' கொள்கையை அதன் முதல் மலர் முதலிதழில் தலையங்கத்தில் தெரிவித்தபடி, அதாவது:-

"மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர்தல் வேண்டும்.........

உயர்வு தாழ்வு என்கின்ற உணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்னும் உண்மை அறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும்; சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும்.

இந்நோக்கங்கள் நிறைவேற உண்மை நெறிபற்றி இவர் எமக்கு இனியர் இவர் எமக்கு மாற்றார் என்கின்ற விருப்பு வெறுப்புகள் இன்றி............நண்பரே ஆயினும் ஆகுக. அவர் தம் சொல்லும்செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்"

என்று நாம் உலகத்தாருக்கு ஆதியில்வாக்குக்கொடுத்தது போலவே இதுகாறும் ஒரு சிறிதும் மாறுதல் இன்றியும் கள்ளங் கபடின்றியும் சுயவு தாக்ஷண்யம் இன்றியும் அது தனக்கு சரிஎன்று பட்டதை எவருக்கும் அஞ்சாது எப்பழிக்கும் பின் வாங்காதுஉண்மையுடன் உழைத்து வந்திருக்கின்றது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

எனவே இப் பத்திரிகையின் கொள்கை இன்னது என்பதையும் அது ஆரம்பித்த நாள் முதல் இதுவரை அதையே கடைப்பிடித்துவந்திருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தவே இக்குறிப்பை வெளியிட்டோம்.

அன்றியும் 'குடி அரசின்' இக்கொள்கை கொண்டஉழைப்பானது மற்றபெரும்பான்மையானபத்திரிகைகளின்உழைப்பைப்போல்பத்திராதிபரின் வாழ்வுக்கும் ஜீவனத்திற்கும்மாத்திரம் அனுகூலமாக்கிகொண்டு நாட்டைபாழ்ப்படுத்திக்கொண்டோ அல்லது ஒரு பயனும் இல்லாமல் மக்களை மூடபக்தியிலும், குருட்டு நம்பிக்கையிலும் அழுத்திக்கொண்டோ அல்லது சோம்பேறி வேதாந்தம் கற்பித்துக்கொண்டோ அல்லது அர்த்தமற்ற சுயராஜ்ய பேச்சோ தேசிய பேச்சோ பேசிக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டோ இருந்துவராமல் மக்களுக்குள் ஒரு வித உணர்ச்சியையும் எழுச்சியையும் கொடுத்து அறிவை விளக்கி வந்திருக்கின்றது என்பதை பல நண்பர்கள் நமக்கு எடுத்துக்காட்டி இருப்பதையே நாம் இங்கு இதுசமயம் சுட்டிக்காட்டுகின்றோம்.

'குடி அரசினால்' தேசிய வாழ்வுக்காரரின் பிழைப்புக்கு ஆபத்து நேரிட்டிருப்பதும் புராணப்பிழைப்புக்காரருக்கு ஆபத்து நேரிட்டிருப்பதும் அவர்கள் நம்முடன் வந்து விவாதமில்லாமல் அடிக்கடி முட்டிக்கொள்வதாலேயேநாம்நன்றாய்உணருகின்றோம். ஆனாலும் அக்கூட்டத்தையும்அவர்களது கூச்சலையும் ஒரு கடுகளவும் லக்ஷியம் செய்யாமல் நாம் முனைந்து நிற்பதால் அவர்களால் நேரிடும் இடையூறுகள் யாவும் தூள் தூளாய். சின்னபின்னப்பட்டு காற்றில் பறப்பதும் வாசகர்கள் நிதமும் உணர்ந்ததேயாதலால் அதை பற்றி நாம் அதிகம் எழுதவரவில்லை.

உதாரணமாக மோட்டார் வண்டிகள் தெருக்களில் வேகமாய்ச் செல்லும்போது தெருப்பொறுக்கும் சுணங்குகள் அவ்வண்டியின் நிலையறியாது அதை வழிமறித்துத் தடுத்து கடித்தெறிந்து விடலாம் என்கின்ற ஆவலுடன் குரைத்துக் கொண்டு சிறிது தூரம் வண்டியைதொடர்ந்து ஓடி காலும் வாயும் வலித்த உடன் சுப்படி முணுமுணுத்துக்கொண்டு திரும்பிப் போய் விடுகின்றனவோ அதுபோல் 'குடி அரசின்' வேகத்தினிடம் அநேகம் பத்திரிகைகளும் தனி நபர்களும் வெகு ஆத்திரமாக அதை தடுத்து நிறுத்தி விடுவதுபோல் ஆர்ப்பாட்டம செய்து பார்த்துவிட்டு அடங்கிப்போனவைகளும் சில மறைமுகமாய் விஷமம் செய்துகொண்டிருப்பதும் சில மானம் வெட்கமில்லாமல் நின்ற நிலையில் இருந்தே குரைததுக் கொண்டிருப்பதுமான நிலையை தினமும் உணருகின்றவர்களுக்கு 'குடி அரசி'ன் வேகத்தைப்பற்றியோ தத்துவத்தைப் பற்றியோ அது உண்மையானதா அல்லது போலியானதா என்பதைப் பற்றியோ அறிவிக்க வேண்டியதில்லை

நிற்க, தமிழ்நாட்டின் நிலைமைகளும்வயிற்றுப்பிழைப்புத்தேசிய வாழ்வுக்காரர்களின யோக்கியதைகளும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வேறுபாடுகளும வெளி மாகாணக்காரருக்கும் வெளி தேசத்தாருக்கும் தெரியப்படுத்த சுமார் 10, 12 வருஷங்களாக பார்ப்பனரல்லாதார் இயக்கமுட 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைளும் எவ்வளவோ பாடுபட்டும் பார்ப்பனருடையவும் அவர்களது கூலிகளுடையவும்பலவிதசூழ்ச்சிகளால் அதன் குரல் வெளியில் போகாமல் தடுக்கப்பட்டிருந்தது யாவரும் அறிந்த விஷயமாகும். அவ்வித தடைகளை எல்லாம் தாண்டி இப்பொழுது வெளி மகாணங்களுக்கும் மேல் நாடுகளுக்கும்கூட அவைகள் எட்டி இருப்பதற்கு, நம் நாட்டு தேசியப் புரட்டும் பார்ப்பனசூழ்ச்சியும்பாமரர்கள் யாவரும் அறிந்திருப்பதற்கும் 'குடி அரசி'ன் தொண்டு ஒரு சிறிதாவது காரணமென்று சொல்வது மிகையாகாது.

'குடி அரசு' முதல் வருஷத்தின் முடிவில் 2000 சந்தாதாரர்களையும் இரண்டாவது வருஷ முடிவில் 4500 சந்தாதாரர்களையும் மூன்றுவது வருஷ முடிவில் 7000 சந்தாதாரர்களையும் கொண்டு உலவி வருவதனாலேயே அது ஒரு விதத்தில் பொது ஜனங்களின் ஆமோதிப்பை பெற்று வருகின்றது என்று சொல்லலாம். அதோடு தமிழ் நாட்டிலுள்ள தமிழ் தினசரி, வாரப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் 'குடி அரசே' அதிகமான சந்தாதாரர்களையும் வாசகர்களையும் கொண்டிருப்பதாகவும் சொல்லலாமானாலும் இனியும் அது அடைய வேண்டிய உயர்ந்த எண்ணிக்கையை அது அடைந்து விட்டதாக நாம் சொல்வதற்கில்லை.

சற்றேறக்குறைய 2 கோடி மக்களையுடைய தமிழ் நாட்டில் 'குடி அரசு' 7000பிரதிகள் மாத்திரம்உலவுவதானது ஒருக்காலும் போதாது என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில்'குடி அரசு' மேற் போட்டுக் கொண்டிருக்கும் தொண்டு இலேசானதல்லஎன்பதாலும் அது அழிக்க முனைந்திருக்கும் கேடுகள் இன்று நேற்று ஏற்பட்ட கெடுதி அல்லவென்பதும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் மயங்கும்படியான தெய்வத்தின் பேராலும் மோக்ஷத்தின் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்டு என்றென்றைக்கும் விடுதலையடையமார்க்க மில்லாமல் கட்டிப் போடப் பட்டிருக்கின்ற தாதலாலும், இந்தக் கேட்டை பரப்புவதையும் நிலை நிறுத்துவதையும் பார்ப்பனரல்லாதாரிலும் பலர் பக்தியாகவும் ஜீவனோபாயமாகவும் கொண்டிருக்கின்றதினாலும் இப்புரட்டுகளும் சூழ்ச்சிகளும உலகத்தில் நூற்றுக்கணக்கான வருஷங்களில் கூட அழிக்க முடியாதபடி கோவில்களாகவும் தெய்வங்களாகவும் வேதங்களாகவும் புராணங்களாகவும் படங்களாகவும பஜனை பாட்டுகளாகவும் இலக்கணங்களாகவும் இலக்கியங்களாகவும் நாடெல்லாம் நிறைந்து அரசன், செல்வவநதன், படித்தவன், பிச்சைக்காரன் ஆகிய எல்லோர் வாயிலும் மனத்திலும் குடி கொண்டதாலும் இப்படிப்பட்டவிஷயத்தை அது எவ்வளவு புரட்டானதானாலும மோசமானதானாலும் மக்களுக்கு எவ்வளவு இழிவும கேடும சூழ்வதானாலும் அதை ஒழித்து உண்மையை வெளியாக்கி மக்களை சீர்படுத்துவதென்றால் அதை சில வருஷங்களில்வாரம் ஒரு 7000பிரதி வெளியிட்டிலமுடியக்கூடிய காரியம் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமே ஆகும். ஆதலால்தான் ஏழாயிரம் பிரதி போதா தென்பதோடு குறைந்தது

50,000 பிரதியாவது வாரவாரம் வெளியாக வேண்டுமென்பதே நமதபிப்பிராயம்.

மற்றப்படி இதற்கு ஏற்படும் எதிரிகளைப்பற்றியோ எதிர்ப்பிரசாரத்தைப் பற்றியோ நாம் ஒருபோதும் கவலைப் படுவதில்லை. ஏனெனில் இதுவரை பல எதிரிகள் வெளிப்படையாகவும் திருட்டுத்தனமாகவும் தானாகவும் கூலிக்கும் தனது உண்மை அபிப்பிராயத்திற்கும்; தனது சுய நலத்துக்கும் ஆக பல விதங்களில் எதிர்த்துப் பார்த்துவிட்டார்கள். நமது வாசகத்தையும் எழுத்தையும் திரித்தும் பழித்தும் விஷமப் பிரசாரம் செய்தும் பார்த்து விட்டார்கள். இவைகளினாலெல்லாம் 'குடி அரசி'ன் அபிப்பிராயம் பரவுவதிலும் பிரதிகள் உயர்வதிலும் எவ்வித தடையும் ஏற்படவில்லை என்கின்ற காரணத்தினாலேயே உறுதி கூறலாம்.

அன்றியும் 'குடி அரசை'யும் அதன் கொள்கைகளையும் எதிர்ப்பதாகவோ வெளியில் எதிர்த்து பிரசாரம் செய்வதாகவோ வெளியில் வந்த யாரும் இது வரை 'குடி அரசில்' கண்ட விஷயங்களில் எதற்காகவாவது ஒன்றுக்கு யோக்கியமான சமாதானம் சொல்லவும் முன்வரவில்லை என்பதினாலும் உணரலாம்.

ஆனாலும் 'குடி அரசு' தமிழ் நாட்டில் 50000 பிரதிகள் உலவி அதில் காணும் முக்கிய விஷயங்களைஜில்லா தோறும் பதினாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியாக்கி வினியோகித்து வந்தால் மாத்திரம் சரியானபடி பரவக்கூடுமே அல்லாமல் இந்த 7000 பிரதியோ அல்லது 17000 பிரதியோ ஒரு காரியமும் செய்துவிடாது என்றே சொல்லுவோம்.

தவிர, "குடி அரசு" இனி ஈரோட்டிலிருந்து வெளிவருவது சற்று கஷ்டமாகவே தான் காணப்படுகின்றது. ஏனெனில் யந்திரங்கள் போதுமானதாயில்லாததோடுபோதிய சௌகரியமுமில்லை இன்னம்ஒருமிஷின்வாங்கவேண்டியதாயும் இருக்கின்றது. இதல்லாமல் இனி "குடி அரசு" ஒரு தனிப்பட்ட மனிதனின் ஆதிக்கத்தில் இருப்பதும் சரியல்லவென்றே நினைக்கின்றோம். என்னவெனில் இப்படி ஒருவராலேயே நடத்தப்படுவதாயிருந்தால் இது இனி வெகு காலத்திற்கு நடந்து வர முடியுமா என்பதுதான். ஆதலால் "குடி அரசை" ஒரு லிமிட்டெட் கம்பெனியாக்கி இந்த கொள்கை கொண்ட ஒரு நிர்வாக கம்பெனியிடம் ஒப்படைத்து இன்னமும் கொஞ்சம் குறைந்த விலையில் அதாவது வருஷம் 2 ரூபாய் சந்தாவில் இனியும் அதிகமான பிரதிகள் வெளியாக்கத்தக்க மாதிரியிலும் இனியும் அதிகம் பேர் படிக்கத்தக்க மாதிரியிலும் செய்யவேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். சாதாரணமாக 20000 பிரதிகள் வாரா வாரம் வெளியானால் வருட சந்தா 2 ரூபாயாக ஆக்கினாலும் நஷ்டம் வராது என்பது நமது துணிபு. பக்கங்களை வேண்டுமானாலும் குறைத்துக்கொள்ளலாம். லிமிடெட்கம்பெனி ஆக்கவேண்டுமென்பதுபொறுப்பை உண்டாக்கவே ஒழிய பணம் அதிகம் தேவை என்பதாகவல்ல என்றும் சொல்லுவோம். இனி ஒரு மிஷினைத் தவிர வேறு ஒன்றும் வேண்டியதில்லை. தவிர நமக்கு எவ்வளவு மன உறுதி இருந்தாலும் சற்று உடல் தளர்ச்சி ஏற்பட்டு விட்டது. என்னவெனில் 2 அல்லது 3, 4 மணி நேரமானாலும பேசுவது சுலபமாயிருக்கின்றதேயல்லாமல்எழுதுவது அரைமணிநேரமானாலும்தலைவலிவந்துவிடுகின்றது.கையும்வலி எடுத்துக்கொள்ளுகின்றது. அடிக்கடி மயக்கம் வருகின்றது: இது தவிர இங்கிலீஷ் வாரப் பத்திரிகையும் (ரிவோல்ட்) நடத்தவேண்டியிருப்பதாலும் அடிக்கடி பிரசாரத்திற்காக வெளியில் போகவேண்டியிருப்பதாலும் 'திராவிடன்' பத்திரிகையின் பொறுப்பையும் ஒப்புக்கொண்டிருப்பதாலும் இவ்வளவு காரியமும் ஒரு மனிதன் தலையிலேயேபோடக்கூடிய காரியம் ஆகுமா என்பதும்யோசிக்கவேண்டிய காரியமாகும். அன்றியும் இக்கொள்கைக்கு ஒரு கட்டுப்பாடான இயக்கம் ஏற்படுத்தி அதற்குஜில்லா தாலூகா பிரசாரக்காரர்களையும் ஏற்படுத்தி அவ்வியக்கத்தில் சார்பாய் இப்பத்திரிகைகள் நடைபெறுவது நலமளிக்குமாதலால் அம்மாதிரி இயக்கம் ஒன்று வேண்டியிருப்பதோடு அதற்காக வேறு பல பிரயத்தனங்களும் செய்யவேண்டி இருக்கிறது. இவற்றையெல்லாம் நன்றாய் யோசிதது பார்த்து ஒரு முடிவுக்கு வரும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## மாயவரமும்
## ஸ்ரீ வரதராஜுலுவின்
## 'வீரமும்'

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் மாயவரத்தில் கூடி பிரமாதமான காரியத்தைச் சாதித்து விட்டதாக தங்களையே புகழ்ந்து கொண்டு அடிதடியுடன் கலைந்து ஆளுக்கொரு மூலையாய் ஓடி ஒளிந்து விட்டு சென்னைக்கு வந்து "கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்று வீரம் பேசுகின்றார்கள்.

மாயவரம் பெரிதும் பார்ப்பன அக்கிராரமாய் இருந்தாலும் அங்கு சில காலமாகவே தேசிய புரட்டுக்கு இடம் இல்லாமலே இருந்ததுடன் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் தமிழ் நாட்டில் முன்னணியில் இருந்தது.

குருகுல வேஷத்தின் போது கூட ஸ்ரீ வரதராஜுலுவை ப்பார்ப்பனர்கள் துன்புறுத்த கட்டுப்பாடாய் ஏற்பாடு செய்து கொண்டு கூட்டத்தில் வந்து விளக்கு முதலியவைகளைக் கூட உடைத்து மீட்டிங்கு நடக்காமல் தொந்தரவு செய்தகாலத்திலும் இதேமாயவரம்தேசபக்தர்களால்தான்தடுக்கப்பட்டு ஸ்ரீ நாயுடு காப்பாற்றப்பட்டார் என்பதை யாரும் மறக்க முடியாது. அப்பேர்ப்பட்ட இடத்தில் 'நிட்டின மரத்தில் பதம் பார்ப்பது' என்கின்ற பழமொழி போல் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு எல்லாரிடத்திலும் நடந்து கொள்ளும் மாதிரியாகவே மாயவரம் தொண்டர்களிடத்திலும் நடந்து கொண்டது அதிசயமல்ல. அதைப்பற்றி நமக்கு அதிககவலைஇல்லை, மாயவரம்தொண்டர்கள் யோக்கியர் அல்லாதவர்களையோக்கியர்என்று நம்பியகுற்றத்தினால் அடைந்தபலன்களுக்குநாம் என்னசமாதானம்சொல்லகூடும். ஸ்ரீ வரதராஜுலுவை பார்ப்பனரல்லாதார் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு அவரைப் பார்க்க அங்கு தனியாய் சென்றதின் பலனாகவே திரு சுப்பிரமணியம் அடிபட நேர்ந்தது. இதைப்பற்றி ஸ்ரீ வரதராஜுலு ஒண்டியாய் வந்தவர் அடிபட நேர்ந்ததைப் பற்றிமாத்திரம்ஜம்பம் பேசிக்கொள்ளலாம். ஆனாலும் திரு சுப்பிரமணிய பிள்ளையைப் பொருத்தவரையில் ஸ்ரீநாயுடுவின் நன்றிகெட்டதன்மையைதமிழ்மக்கள் பெரிதும் அறிய இது ஒரு சம்பவமாகும். நிற்க,

ஸ்ரீ வரதராஜுலு சுயமரியாதைப்பிரசாரத்தை அடக்கவும்மாயவரத்தில்ரத்தம்சிந்தியதைப் போல் தமிழ் நாடு எங்கும் இரத்தம் சிந்தச் செய்யவும் 20 ஆயிரம் ரூபாய் சென்னை காங்கிரசில் மீந்த பணத்திலிருந்து ஒதுக்கிவைத்திருப்பதாகவும் அதை செலவிட்டு அடக்கிவிடப் போவதாகவும்பந்தயங்கூறி நம்மைபயமுறுத்துகிறார். ஸ்ரீ வரதராஜுலுவின் வீரத்திற்கும் அவரது பந்தயத்திற்கும் எவ்வளவு தூரம் மதிப்பு உண்டென்பது தமிழ் மக்களுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம்தான். வெறுங்குடத்தைதட்டினால் அதிகமாகத்தான் சத்தம் கேழ்க்கும் உள்ளே சாமான் இருந்தால் சத்தமாகாது என்பது போல் ஸ்ரீ வரதராஜுலுவின் வாழ்வின் அஸ்திவாரமே இந்த வாயளப்பைத்தவிர வேறுஒன்றும் இல்லைஎன்பதுஅவருடன்பழகாதஎதிரிக்குங்கூட தெரிந்த விஷயம். தான் அடங்கிக்கிடக்க நேரும்போது, "கிடந்து போகட்டும் என்று அலட்சியமாய் இருந்து வந்தோம்" என்பதும் வெளியில் வர கொஞ்சம் இடம் கிடைத்ததும் "இனிமேல் பார் நம்ம சங்கதி" என்பதுமான வீரமும் அவர் கூடவே பிறந்த குணங்களாகும். இம்மாதிரி இதற்குமுன் எத்தனை தடவை பேசியிருக்கிறார். இதுவரை ஏதாவதுஒருசெல்லாக்காசு பெறுமான காரியமாவது செய்தாரா? அல்லது அதனால் ஏற்பட்டதா? என்கின்ற விஷயங்களை கவனித்தால் உண்மை வெளியாகாமல்போகாது, தவிர ஸ்ரீவரதராஜுலுவின்எதிர் பிரசாரதின்யோக்கியதை அறியாதவர்கள் இந்த மாகாணத்தில் யாரும் இல்லையாதலால் அதைப்பற்றிஎழுதவேண்டிய அவசியமும் இல்லை என்றே இத்துடன் விட்டு விடுகின்றோம்.

மற்றபடி எந்தபார்ப்பனர்களாவதுஇவரை நம்பிபக்கத்தில்சேர்த்துக்கொள்வார்கள்என்கின்ற சந்தேகமும்நமக்குகிடையாது. ஆதலால் இவராகப் போய் பார்ப்பனர்களுடன் உறையவேண்டியது தானேயல்லாமல் இவரைக்கொண்டு அவர்களுக்கு யாதொரு காரியமும் ஆகிவிடப் போவதில்லை. ஆதிதிராவிடர்களின் இயக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் விரோதமாய் சிலருக்கு கூலி கொடுத்து திராவிடர் சபை என்பதாக ஒரு போலி சபையை உண்டாக்கியிருப்பது போல ஸ்ரீ வரதராஜுலுவைப் பிடித்து பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு விரோதமாக 'தேசீய பார்ப்பனரல்லாதார் சபை' என்பதாக ஒன்றை ஏற்படு

த்தி நமக்கு விரோதமான காரியங்களைச் செய்ய தூண்டலாம். ஆனால் இனி அவைகள் நடப்பதென்பது முடியாத காரியம் என்றே சொல்லுவோம். ஏனெனில், ஸ்ரீ வரதராஜுலும் இந்த மூன்று நான்கு வருடங்களாக தேசிய சபை என்றும் தேசிய பார்ப்பனரல்லாதார் சபை என்றும் ஒவ்வொரு தடவையும் தன் கை காசு 100, 200 செலவு செய்து கூட்டம் கூட்டியும் கட்சி சேர்த்தும் பார்த்து விட்டார். அக்கூட்டங்களுக்கெல்லாம் இதுவரை போனவர்கள் எத்தனை பேர் என்பதும் அவர்கள் யார் யார் என்பதும் அதில் பெரும்பாலோர் மற்றவர்கள் யார் கூப்பிட்டாலும் போகாதவர்களா என்பதும் கவனித்தவர்களுக்கு தெரியாமல் இருக்க முடியாது. மாயவரத்தில் திரு. சுப்பிரமணிய பிள்ளையை அடித்து விட்டு வந்த ஜோரில் 19-தேதி சென்னையில் கூட்டப்போவதாக பறை அடித்த தொண்டர் கூட்டம் தேதி போடாமல் ஒத்திவைக்க நேர்ந்தது 27-தேதி 'தமிழ் நாடு' பத்திரிகையை பார்த்தால் தெரியும்.

இந்த நிலையில் தகப்பன் வீட்டுப் பெருமையை அண்ணனிடம் சொல்ல வந்த பயித்தியகாரி போல் ஸ்ரீ வரதராஜுலுவின் தேசிய பெருமையை தமிழ் மக்களிடம் சொல்லவருவது வேடிக்கையாயிருக்கின்றது.

தவிர, ஒரு காலத்தில் ஸ்ரீ நாயுடு போன்ற மற்றொரு பார்ப்பனரல்லாத தேசியவாதியை 'ஏனையா ஜஸ்டிஸ் கட்சியை வைகின்றீர்' என்று ஒருவர் கேட்டதற்கு அவர் 'திரு. ராமசாமி நாயக்கர் என்னை வைகின்றார் ஆதலால் அவர் ஆதரிக்கும் ஜஸ்டிஸ் கட்சியை நான் வைய நேரிடுகின்றது' என்று சொன்னார். இப்போது ஸ்ரீ வரதராஜுலுவையும் ஒருவர் கண்டு 'என் ஜஸ்டிஸ் கட்சியுடன் போய் முட்டிக் கொள்ளுகின்றீர்' என்று கேட்டால் இவரும் அதே மாதிரி 'திரு. நாயக்கர் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கின்றார், திரு. நாயக்கரை ஜஸ்டிஸ் கட்சி பின் பற்றுகின்றது, அதனால் நான் அதை ஒழிக்கவேண்டியிருக்கின்றது' என்று சொல்லுகின்றாராம். எனவே இவ்விரண்டு தேசிய பிராமணரல்லாதார்களால் ஜஸ்டிஸ் கட்சி அழிந்து விடக்கூடுமாயிருந்தால் அது இன்றைக்கே அழிந்து விடுவது மேல் என்றே ஆசைப்படுகின்றோம், அந்த மிரட்டுதலுக்கும் இங்கு யாரும் பயப்படுகின்றவர்களும் இல்லை என்பதை தைரியமாய்ச் சொல்லுவோம். நிற்க ஸ்ரீ வரதராஜுலுகடைசியாக திரு வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களை தஞ்சமடைந்திருப்பதாக தெரியவருகின்றது.

நம்மை முன்னிட்டாவது அவர்கள் இருவரும் மறுபடியும் ஒற்றுமைப்பட நேர்ந்தது பற்றியும ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுத்துகொள்ள நேர்ந்ததைப்பற்றியும் நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதுடன் அவர்களது ஒற்றுமையின் பலனையும் கவனித்து வருவோம்.

---

## 'ரிவோல்ட்'

25—4—28 ல் "ரிவோல்ட்" பத்திரிகைக்கு ஈரோடு முதல் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஸ்ரீமதி நாகம்மாள் பதிப்பாளராகவும் பிரசுரகர்த்தாவாகவும பதிவுசெய்து கொண்டார்கள். மே மாதத்தில் பத்திரிகை வெளியாகக் கூடும். திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியும் S. ராமநாதனும் கூட்டு ஆசிரியர்களாய் இருப்பார்கள்.

---

## தக்ஷிண யுத்தமா ?

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் மாயூரக கூட்டத்தில் மண்டைகள் பல உடைபட்டதை முன்னிட்டுச் "சுயமரியாதை"க் கட்சியுடன் போர் தொடுக்கப்படுமென்று சென்னைத் 'தமிழ் நாடு' யுத்தமுழக்கஞ்செய்கின்றது. இதற்காக காங்கிரஸ் நிதியிலிருந்து ரூ. 10,000 தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதென்றும், வேண்டுமானால் ரூ 20,000 செலவழிக்கப்படுமென்றும கூறுகிறது. "வான மிடிந்தாலும், கடல் கரைபுரண்டாலும், ஈசல்களைப்போல தேசபக்தர்கள் மடிய நேர்ந்தாலும்" பாரதப் போரில் கிருஷ்ணன் உபதேசித்ததற் கொப்பப் பின்வாங்காது சண்டை செய்யப்படுமாம். "மகாத்மா" காந்தியின் சீடர்கள் தொடுக்க விருக்கும் இப்போரில் எம் முஸ்லிம்கள் நடுவில் அகப்பட்டுக்கொண்டு என்ன துன்புறுவார்களோ வென்று பயப்படவேண்டியே யிருக்கிறது. அஃது எப்படியாயினும் ஆகட்டும். இப்பொழுது பல மதஸ்தர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் நிதித்தொகையிலிருந்து என்ன நியாயத்தைக் கொண்டு ஹிந்துக்களின் பிராமண அப்பிராமண வகுப்புச் சச்சரவுகளுக்குப் பணம் உபயோகிக்கப் படுகின்றதென்று வினவுகிறோம். இவ்விஷயத்திலிருந்தாவது காங்கிரசுக்குப் பொருளுதவி செய்த இன்னும் செய்யும் முஸ்லிம் பிரமுகர்கள் ஒரு படிப்பினையை அறிந்து கொள்ளமாட்டார்களா? காங்கிரஸ் என்பது ஹிந்து மகாசபையின் மூத்த சகோதரனென்று யாம குறிப்பிடும் போதெல்லாம் காங்கிஸ் மயக்கங்கொண்ட சில முஸ்லிம் நண்பர்கள் எம்மீது குறை கூறுகின்றனர்.

"தாருல் இஸ்லாம்"

---

### அப்பர் சுவாமிகள் குருபூஜை வைபவம்.

ஈப்போ.

விபவ வருஷம் சித்திரைமாதம் 4 ந்தேதி சோமவாரம் அப்பர்சாமி குருபூஜையை பொறை ஈப்போ ஸ்ரீமான் வை. பெ. கோவிந்தசாமிபிள்ளை யவர்கள் தமது இல்லமாகிய லகார் ரோட் 35 நெ வீட்டில் செய்துபிரசங்கங்களும் செய்து அடியார்களுக்கும் 600 700 ஜனங்களுக்கும் ஜாதி வித்தியாசமின்றி அறுசுவை பதார்த்தங்களுடன் அன்னம் அளித்து காரியங்களை பூர்த்தி செய்தார்கள்.

ஒரு நிருபர்

---

## மலேயா நாடு.

### பேரா இந்து மகாஜன சங்கம் மூன்றாவது மகாநாடு.

இம்மகாநாடு 7-4-28உ இரவு 7 மணிக்கு லதைப்பிங் மெயின் ரோட்டிலுள்ள பேரா இந்து மகா சன சங்க கட்டிடத்தில் கூடியது. பிரம்மஸ்ரீ சிவத்தியாகாநந்த மகரிஷி அவர்கள் தலைமை வகித்தார்.

அவ்வமயம் அநேக இந்து முஸ்லீம் ஆதிதிராவிடகனவான்கள் சுமார் 200 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் தீண்டாமையை ஒழித்து நடந்து கொண்டது போற்றத்தக்கது. நிற்க,

அவர்களில் கல்வி என்ற விஷயத்தைப் பற்றி திண்டுக்கல் ஸ்ரீமான் எம். வி. கே. தங்கமீரான் சாகிப் அவர்களும் பனக்குளம் ஸ்ரீ எ. எம். பி. அமுது களஞ்சியம் அவர்களும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன்பேரில் மகரிஷி அவர்களும் அரிய மேற்கோள்களுடன் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள், 8-4-28-தேதி காலை 9 மணிக்கு பினாங்கு உயர் திருவாளர் வே. நடேசம் பிள்ளை ஜே. பி. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் நடைபெற்றது.

1 கதர் 2 புலாலுண்ணாமை 3 புனர் விவாகம் 4 கள்ளுண்ணாமை 5 தீண்டாமை 6 புரோகித பகிஷ்காரம் இவைகளை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புரோகித விடுதலைவிஷயமாக, தமிழ் மொழியிலேயே சகல கர்மமும் நடத்தப்படவேண்டுமென்றும் எக்குலத்தில் பிறந்தவரானாலும் கல்வி, ஒழுக்கம், அன்பு முதலியவை நிறைந்த ஒருவரை புரோகிதராக நியமிப்பதில் ஆக்ஷேபனையில்லை யென்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது.

நாலைந்து நண்பர்கள், பார்ப்பனர்களையே வைத்து சகல கிரிகைகளும் செய்யப்படவேண்டுமென்றும் சகல மந்திரங்களும் வடமொழியிலேயே சொல்லப்படவேண்டுமென்றும் வாதித்தார்கள்,

கனம் சபைத் தலைவர்கள் மேடி தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டதில் பார்ப்பனப் புரோகித ஆதரவுக்காக 5 ஓட்டுகளும் பகிஷ்காரத்திற்காக சுமார் 150 ஓட்டுகளும் கிடைத்தன. சபைத்தலைவர் ஸ்ரீமான் ஜே. பி. அவர்கள் புரோகித விஷயத்தில் இவ்வளவு அதிக ஓட்டுகள் கிடைத்தும் அந்த விஷயத்தை பொருத்தமட்டில் அடுத்த மகாநாட்டில் தீர்மானம் செய்துகொள்வோமென்று நொண்டிச்சாக்கு சொல்லி நழுவ விட்டுவிட்டதைப் பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம்.

பிரம்மஸ்ரீ மகரிஷியவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் கூட பார்ப்பனீயம் நுழைந்து கொண்டிருப்பது விளங்கிற்று.

நண்பர்களே பார்ப்பனப் புரோகிதத்தை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கம் காட்டுத்தீபோல் பரவிவருகிற இக்காலத்தில் பார்ப்பனபுரோகிதமும் வடமொழியும் அவசியமென கருதுவதானது மிகவும் நகைப்பைத்தருமென்பதில் ஐயமில்லை. தலைவர் முடிவுரையின்பிறகு இரவு 8-மணிக்கு கூட்டம்கலைந்தது

R. பொன்னையா, தைப்பிங் F. M. S

# 'தமிழ் நாடு' பத்திரிகையும் ஆதித்திராவிடர்களும்.

பம்பாயிலிருந்து திரு. சுந்தர ராமாநுஜம் அவர்கள் எழுதுவதாவது.

ஜனவரி மாதம் 8 தேதி சென்னையில் கூடிய ஆதிதிராவிட மகாநாடு தீர்மானித்த தீர்மானங்களும் விஷயங்களும் நேயர்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன், அம்மகாநாட்டில் ராயல் கமீஷனை ஆதரித்து தீர்மானங்கள் செய்திருப்பதை முன்னிட்டு 'தமிழ் நாடு' பத்திரிகை என்னவோ வாயில் வந்தபடி பேசி ஆதி திராவிடர்களை பயமுறுத்துகிறது. இந்தப் பயமுறுத்தலையும் அறிவோம்.

42 வது காங்கிரஸ் மகாநாடு கூடி தீர்மானித்த தீர்மானத்தையும் அத்தீர்மானத்தை புகழ்ந்து பல்லவி பாடிய ஸ்ரீ வரதராஜுலுவையும் 42 வருட காலமாக காங்கிரஸ் ஏற்பட்டு செய்த தேசத் தொண்டையும் காங்கிரசால் தேசத்திற்கு ஏற்பட்ட நன்மை தீமைகளையும் தலைவர்கள் என்றும் அரசியல் வாதிகள் என்றும் சொல்லிக்கொண்டுதிரியும்போலி தேசபக்தர்களையும் அவர்கள் எட்டினால் தலையைப் பிடி எட்டாவிடில் காலைப் பிடி என்று சமயத்துக்கு சமயம் நேரத்துக்கு நேரம் வௌவால் இனத்தைப் போன்று மாறிக்கொண்டு வருவதின் யோக்கியதையும் இன்னும் இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்திருக்கும் நன்மைகளையும் அரசாங்கத்தார் ஆதி திராவிடர்களுக்கு செய்திருக்கும் நன்மைகளையும் ஒழுங்கே ஆலோசனை செய்தே ஆதிதிராவிட தலைவர்கள் ராயல் கமிஷனை ஆதரித்து தீர்மானம் நிறை வேற்றி இருக்கிறார்கள். கோழைத்தனமாய் நிறைவேற்றவில்லை என்பதை 'தமிழ் நாடு' பத்திரிகை அறியட்டும் 'தமிழ் நாடு' பத்திரிகை தன்னைவிட சமர்த்தன் இல்லை என்றும் ஆதிதிராவிடர்களைப் பயமுறுத்த முன் வந்துவிட்டது. 'தமிழ் நாடு' பத்திரிகையைப் போன்று நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டு வௌவாலைப் போன்று அங்கும் இங்கும் அலைந்து திரியும் நோக்க முடையவர்கள் ஆதிதிராவிடர்கள் அல்லவென்பதையும் ஸ்ரீ வரதராஜுலு அறியட்டும்.

இன்றுதினம் தென்னாட்டில்வைக்கம்வீரர் திரு கண்ணப்பர் ஜெ என் ராமநாதன்முதலியஜன்டின் தலைவர்கள் செய்து வரும் அரிய பெரிய ஊழியத்தையும் ஆதி திராவிட சமூகமும் ஏனையோரும் அறிவார்கள். 'தமிழ் நாடு' பத்திரிகை வீண் பறைசாற்றிப் பூனையை வைத்துக் கொண்டு என்னிடத்தில் புலி இருக்கிறது விட்டு விடுவேன்என்று பயங்காட்டுகிறது. உண்மையில் இந்தப் பயமுறுத்தலுக்கு ஆதி திராவிடர்கள் கடுகளவும் பயப்படமாட்டார்கள் என்பது திண்ணம்.

பிராமணர்களின் நயவஞ்சகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பாமர மக்களை ஏமாற்றும் கபட நாடக சூஸ்திர சங்கீதத்திற்கும் கை தாளம் போடுமிவர் தன்னை மறந்து ஆட்டுக்குட்டியை முதுகின்மேல்போட்டுக்கொண்டு 'ஆட்டைக் காணோம் குட்டியைக்காணோம்' என்று உளறுவதுபோல் அறியாமையால் ஆதி திராவிடர்களை அரசாங்கத்திற்கு தாளம் போடுவதாக பிதற்றுகின்றார்



இங்கிலாந்தில் பக்கிங்ஹாம் அரண்மனையில் ஆப்கன் அரசரும் அவர் இராணியாரும் முகமூடி எடுபடாதே பறந்து விட்டது.

எதிரியைவிட காட்டிக் கொடுப்பவர்களாலேயே அதிக கேடு வருமென்று வருந்துகிறார், இந்திய தேசத்தையும் தமிழ் மக்களையும் காட்டிக் கொடுத்தவர்களும் காட்டிக் கொடுக்கின்றவர்களும் அதன் மூலம் வெள்ளையர்களுக்கு தாசர்களாயிருந்து உத்தியோகமும் பதவியும் பெற்று ஐயாயிரம் ஆராயிரம் பத்தாயிரம் ரூபாய்கள் ஊதியம் பெற்று உயிர் வாழும் நயவஞ்சக கூட்டத்தார் ஆதி திராவிடர்கள் அல்லவென்பதையும் மச்சத்தை காட்டிக்கொடுத்த சகுனி புலிகள் வேறு இருக்கும்போது ஆதி திராவிடர்கள் மீது வீண் பழி சாற்றுவது இவரின் அக்கிரமமென்று தான சொல்வோம்

ராஜ விசுவாசப் பல்லவி பாடுவது கேடான விஷயமென்றும் ஏளனம் செய்கிறார் தேசபக்தனென்ற முறையில் காங்கிரசின பெயரால் பிராமணர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு ஸ்ரீ வரதராஜுலு தேசவிசுவாசப்பல்லவி பாடுவது வெட்கக்கேடாக இல்லையா என்றுதான் ஸ்ரீ வரதராஜுலுவைக் கேட்கின்றோம்.

மற்ற இந்துக்கள் ஆதி திராவிடர்களுக்காக சிறை சென்றதாகவாய் பறை சாற்றுகின்றார் இதை நோக்குங்கால் வீண் பகல் கனவேயாகும். இவர்கள் தங்களை தேச பக்தர்கள் என்றும் ஜெயிலுக்குச் சென்றவர்கள் என்றும் பாமர மக்களை ஏய்த்து தேசபக்தனென்ற பெயர் பெற்றுக் கொள்ளவும் காங்கிரசியின் பேரால் ஏழை மக்களிடத்தில் லட்சக்கணக்கான பணங்களைப் பறித்து அமெரிக்கன் மோட்டார் வாங்கி சவாரி செய்யவும் தேசபக்தர்களென்ற பேரால் ஜனங்களிடத்தில் ஓட்டு பெற்று சட்ட சபைக்குள் நுழைந்து அங்கு தன் சுயநலத்திற்கு வேண்டிய காரியாதிகளை முடிக்கவும் சென்றார்களே தவிர தேச நன்மைக்கு ஒன்றும் செய்துவிடவில்லை என்பதையும் ஆதி திராவிடர்களுக்காகச் சிறை செல்லவில்லை என்பதையும் 'தமிழ் நாடு' பத்திரிகைக்கு அறிவுறுத்துகிறோம்

ராயல் கமிஷனை இந்தியா முழுமையும் பகிஷ்காரம் செய்கிறார்களென்று வீண்வாய்ப் பறை சாற்றுகின்றார்.

எண்ணிறந்த ஏழை மக்கள் உடுக்க ஆடைகள் இன்றி குடிக்கக் கூழ் இன்றி படுக்க வீடு இன்றி பாதவிக்கு மிக்காலத்தில் ராயல் கமிஷன் என்றால் என்னவென்பதை அறியாத பாமர மக்கள் கமிஷனை பஹிஷ்காரம் செய்கிறார்கள் என்று ஓலமிடுவது இவரின் யோக்யதையை விளக்குகிறது.

இதர இந்துக்களுடன் சேர்ந்து வேலையைச் செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார் நயவஞ்சகம் நிறைந்த பார்ப்பனர்களின் கொடுமைகளும் ஜாதிகர்வம் கொண்ட இந்துக்களின் இறுமாப்பும் இத்தேசத்தில் தலைவிரித்து தாண்டவமாடு மிக்காலத்தில் எங்ஙனம் சேர்ந்துழைப்பர் யார் சேர்ந்துழைப்பார் என்றுதான கேட்கிறோம்.

ஆயிரக்கணக்கான துருப்புகளும்ஆகாயக் கப்பல்களும் வைத்திருக்கும சர்க்கார் ஏன ஆதித்ராவிடர்களுக்கு ஆலயதரிசனம் செய்ய அனுமதி யளிக்கக்கூடாது என்று கேட்கின்றார். திருவண்ணாமலை கோவில் விஷயமாய் திரு கண்ணப்பர தொடுத்திருக்கும வழக்குக்குகாரணம் இந்துக்கள்

என்று சொல்லிக் கொள்ளும் தர்ம கர்த்தாக்கள் தானே. அரசாங்கத்தார் ஆதித்திராவிடர்களுக்கு ஆலய பிரவேசம் வேணுமென்று சொன்ன மாத்திரத்திலேயே 'அரசாங்கத்தார் மதவிஷயத்தில்தலையிடக்கூடாது, மதம் கெட்டுப்போய்விடும், ஜாதி ஒழுக்கம் கெட்டுப்போய்விடும், கோவில் கெட்டுப் போய்விடும்' என்றுசர்க்காரைக் கண்டிக்கமுற்பட்டுவருவதைஸ்ரீ வரதாராஜலு அறிந்திருந்தும் அரசாங்கத்தார் மீது பழிபோடுவது என்னே.

ஏதோ கொஞ்சம் கல்வியை வெள்ளையர் பரவச் செய்கிறார்கள் என்பதை தான் ஒப்புக் கொள்ளுகிறதாகவும் சொல்கிறார் இவரின் அறியாமையையென்னென்றுசொல்வது! இந்தியா தேசமே வெள்ளையர்கள் இந்த நாட்டுக்கு வந்த பின்னர் கல்வி வழங்கப் பட்டு பாமர மக்கள் கல்வி பயன்று வருவதையும் இத்தேசத்திலுள்ள ஜாதிப் பேய் பிடித்த இந்துக்களும் பிராமணர்களும் அக்கல்விக்கு தடை செய்ய பல சூழ்ச்சிகள் செய்து வருவதையும் பாமர மக்கள் அறிந்திருப்பதை இவர் அறியாதவர் போல் பேசுவதானது இவரின் தேச பக்தியை விளக்குகின்றது. சுயராஜ்யமே கூடாதென்று ஆதிதிராவிடர்கள் நினைப்பதாகஇவர்மனப்பால்குடிக்கிறார். இதுவின் பிதற்றேயாகும் ஆதிதிராவிடர்கள் அவ்விதம் நினைப்பதன்று அன்னியர் ஆட்சி இருக்கும் போதே பஞ்மா பாதகமாகிய தீண்டாமையும் ஜாதிதுவேஷமும் தலைவிரித்துத் தாண்டவம் புரிந்தால் சுயராஜ்யம் வந்த பின்னர் எவ்விதமிருக்குமென்பதை யோசித்துப்பார்க்கட்டும். மக்கள் சுதந்தா மிழந்து நாயினும் கேடாய் நடத்தும் போது எந்த உண்மை சுதந்திரவாதியும் சுயராஜ்யத்தை ஒப்புக் கொள்ளார் என்பது உண்மை, நாட்டில் மக்கள் சுதந்திரம பெற்றால் அதுவே சுயராஜ்யமென்போம்

ஆதிதிராவிடர்களின் பழைய செய்கையால் இந்தியாவில் அடிமைத்தனம் அதிகரித்திருக்கிறதென்று ஆகாயகோட்டைகட்டுகின்றார் இந்தியாவின் அடிமைத்தனத்திற்குக் காரணம் மதமும் பகிஷ்காரமும் தீண்டாமையு மென்று உண்மை தேச பக்தர்களும் பெரியோர்களும சொல்லி வரும் போது வீணே ஆதிதிராவிடாகள் மீது பழியைச் சுமத்துவது இவரின் பிராமண கங்காணித்தன்மையைக் காட்டுகின்றதென்றே சொல்லுவோம். தீண்டாமையைப் போக்க காங்கிரசைவிட எந்த சபையும வேலை செய்ய விடவில்லை என்று சொல்கிறார் இது இவரின் காங்கிரசின் மயக்கமென்று தான் சொல்லுவோம காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 42 வருடமாகியும் காங்கிரசு உண்மையோடு உழைத்திருக்குமாகில் இத்தீண்டாமை இன்னும தேசத்தை விட்டு ஏன் போகவில்லை என்று தான் கேட்கின்றோம். இவ்வருடம் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில் தீண்டாமை விலக்கை ஒரு வேலையாக எடுத்துசெய்யவேணுமென்றும் ஸ்ரீ ஆர் கே ஷண்முகம் செட்டியார் அனுப்பிய தீர்மானம்என்னவாயிற்று என்றும் அதற்குவரதாராஜலுநாயுடு எவ்வித உதவி புரிந்தார் என்பதும் பார்ப்பனர்களுக்கு பயந்து எல்லோரையும் ஏமாற்றி விட்டார்கள் என்பதும் காங்கிரஸ்க்கு சென்றிருந்தவர் அறியார் போல் பிதற்றுவது ஆச்சரியப் படத்தக்கதாகும் காங்கிரசு இவ்வளவு யோக்கியதையிலிருக்கும் போது தீண்டாமைக்கு காங்கிரஸ் பாடு பட்டதென்றால் மனதறிந்து மக்களை ஏமாற்றுவதாகுமா இல்லையா? இந்த நாட்டிலே நீங்கள் இருக்கப் போகிறீர்கள் சீமைக்குப் போய் குடியேற முடியாது. என்று சொல்லுகின்றார். இதை நோக்குங்கால் சிரிப்புக்கிடம் தரக்கூடியது இது காரும் ஆதிதிராவிடர்களை சீர்மைக்குப் போய் குடியேறப்போகிறார்கள் என்று தான் ஸ்ரீ வரதராஜலு எண்ணியிருந்தார் போலும் இத்தேசத்திலுள்ள ஜாதிப் பேய் பிடித்த பித்தர்களையும் புரோகிதப் பிடிவாதம் கொண்ட பிராமணர்களையும் அவர்களின் அட்டூழியங்களையும் கொடுமைகளையும் அடக்கி சுதந்திரம் பெறஇரத்தம் சிந்த வேணுமானாலும் ஆதித்திராவிடர்கள் பின் வாங்கார்கள்என்பதையும் ஸ்ரீ வரதராஜலுமனதில்பதிவு செய்வாராக.





போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண எஜன்சி, 26 வெள்ளாளத்தெரு, வேப்பேரி மதராஸ

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங் கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனம்!

விலாசம்:— "ஆனந்த விகடன்" ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.


## ஜில்லா போர்டு அங்கத்தினருக்கு தேக்கச்சேரி.

22-1-28 ந் தேதி மாலை 3. 30 மணிக்கு திருவள்ளூர் தாலுக்கா கிழ்ச்சேரி கிராமத்தில் ஸ்ரீமான் கொ ஜாகோப்நாயுடு காருசெங்கல்பட்டு ஜில்லா போர்டு அங்கத்தினரானது பற்றி அக்கிராமத்தார் அவருக்கு ஒரு தேக்கச்சேரி நடத்தினார்கள்

அப்போது பல பிரமுகர்கள் விஜயம்செய்திருந்தார்கள். மேற்படி ஜில்லா போர்டு அங்கத்தினர் ஜாகோப் நாயுடுகாருக்கு சில வெகுமானங்கள் வழங்கப் பெற்று ராஜ வாழ்த்துடன் சபை கலைந்தது.

எம். பாப்பய்ய நாயுடு.


## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகுள்ள வெள்ளி ஜரிகை மாக்குகளும், பாம்பே குவரலட்டி மேல் கண்ட மாக்குகளும், சூரத் மாக்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

## குன்னூரில் சாமிகளின் தாண்டவம்.

ஸ்ரீ வேணுகோபால் சுவாமி, ஸ்ரீ சுப்பரமண்ய சுவாமி ஆகிய இரு ஆலயத்தினருக்கும் பற்பல காரணங்களை முன்னிட்டு வழக்குகள் ஏற்பட்டதின் காரணமாய் 6-4-28 ஓர் கூட்டம் நடந்தது. டி கூட்டம் கலைந்து சுவாமி தெரிசனம் பண்ணிக்கொண்டிருந்து கலகமுண்டாகி கண்ணாடி ஓடுகளாலும் மலைப்பிஞ்சுகளாலும் உலக்கை தடிகளாலும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு பலத்த காயமேற்பட்டு ஆஸ்பத்திரிக்குப்போய் பரிகாரமும் நடந்தேறி வருகிறது. இதற்கிடையில் இருதரத்தாரும் போலீஸ் கம்ப்ளேயின்ட் கொடுத்து விசாரணைகளும் நடந்துகொண்டு வருகிறது. இன்னமும் கலக மேற்படுமோவென்று போலீசாரும் கண்ணோட்டமாயிருந்து வருகிருர்கள். என்னே கடவுளின் பெருமை!

'கண்ணில் கண்டேன்'


## இனும்! இனும்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டுப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனும் அனுப்பப்படும். ஈண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு கஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் சீக்கிரத்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனும் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனும்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

## எதிர்கால பலன்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினல் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதர், ஸந்தானம், பாக்யெம், யோகம், விரையம், களத்திரம், களத்திரரூபம், சத்ரு, ருணம், ஜீவனம், தொழில், ஆக இத்யாதி விஷயங்கள் தெரிவிக்க ரூ. 2. வெளிநாட்டு நண்பர்கள் முன் பணம் அனுப்ப வேண்டும்.

சோதிடாலயம், வைத்திக்குப்பம்,
புதுவை. (பிரஞ்சிந்தியா).

விலை சரசம்! இனும்! உறுதியானது!!!

கிளாஸ் பலவிதமான கலர் காலர் பொத்தான் ரூபாய் 1-க்கு டசன் 16. முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் கூலி இனும். ஒரு ரூபாய்க்கு குறைந்ததும் முன்பணம் அனுப்பாததுமான ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

K. பாலய்ய செட்டி, ஷாப், நாகூர். S. I.



உலகப் பிரசித்தி பெற்ற பரம்பரை வைத்தியர்! ஆயிரக்கணக்கான குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்திய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர் பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!!! சமஸ்தான வைத்திய நிபுணரான பழநி சி. மலையப்பசாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர் வாசிகளால் மதிக்கப்பெற்றவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி,

## மகா வீரிய தங்கபஸ்பம்.

பச்சிலை மூலிகையினலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை. அபார தாதுபுஷ்டியும், பலமும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாக்கும். இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ 10

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரத ராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீக்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30. ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். பினங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:-முருகன் ஏஜன்ஸி 43 அரமணைக்காரத் தெரு, ஜி.டி. சென்னை

## என். தண்டபாணி & கம்பெனி.

### நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கதர்த்துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் நயமாயும் நல்லதாயும் கிடைக்கும்.

தேவைக்கு எழுதுங்கள்.

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக்கொள்ளப்படும்.)

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ 100க்கு 25 வீதம் முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:— என். தண்டபாணி பிள்ளை,
தபால் பெட்டி 292, சைனபஜார், நெ. 292, மதருஸ்.

## கக்குவானுக்கு.

ஹரிதாசர் நெய் மிகவும் கைகண்டதும், பிரசித்தி பெற்றதும். 4-5 நாளில் சுகமாக்கும். 3 மாதம் கஷ்டப்பட வேண்டியதில்லை. விலை ரூ. 1. தபால் வி. பி. 5 அணா.

## காலராவுக்கு.

வாந்திபேதி, விஷபேதி, அஜீர்ணபேதி முதலிய வியாதிகளுக்கு ஹரிதாசர் காலரா துளி மருந்து 20 வருஷமாக அநுபோகப்படி மிகவும் கைகண்டது; தவறாதது. புட்டி ரூ. 1-4.

டாக்டர் எச். தாசர், பி. ஏ., எல். டி., எம். டி. எஸ்ஸி,
தாசர் சித்த வைத்தியசாலை, தின்னனூர் R. S.

இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ்

டிபார்ட்மெண்ட்

## 5-மீ இங்கிலீஷ்கோர்ஸ்

புது ஆரம்பம் ! முந்துங்கள் !!

100–மாணவர்களுக்கு மேல் எடுக்கப்படமாட்டாது.

வயதாகி விட்டதென்று நினைக்க வேண்டாம். ஆர்க்ரைட் என்னும் மேதாவி 50-வது வயதில் ஆங்கில இலக்கணம் படிக்க ஆரம்பித்தார். 5மா- கோர்ஸ், ஜூனியர், சீனியர் இம்மூன்று கோர்ஸ்களையும் முடித்து பாஸ் பண்ணினவர்கள் டாக்டர், இன்ஜினியர், லாயர் முதலிய தொழில் படிப்புக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் மேலான படிப்புகளுக்கும் எடுக்கப்படுகிறார்கள். ஷை கோர்ஸ்களை தாங்கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி தபால் மூலம் படித்து தாங்கள் விரும்பும் தொழிலுக்குப் போகலாம். ஏராளமான நற்சாட்சி பத்திரங்கள். முதலாவது 5 மாத இங்கிலீஷ் கோர்ஸில் சேருங்கள். ரூ. 5—0—0 (முழுக்கோர்ஸ்) அயல்நாடுகளுக்கு வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது. ஒவ்வொரு கோர்ஸ் முடிந்ததும் உயர்ந்த சர்டிபிகேட் கொடுக்கப்படும். தமிழ் தெரிந்தவரும் சேரலாம்.

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

நாகூர்



## பன்னிரு திருமுறைத் திரட்டு.

15—6—28 ல் வெளிவரும்.

அடக்க விலை ரூபா 1 க்கு பிரதிகள் 3.

250 பக்கம் கண் கவரும் உயர்ந்த பதிப்பு.

குறிப்பு:— 31—5—28 க்குள் முன் பணமனுப்புகிறவர்கட்கு மட்டும் ரூபாவுக்கு 3 பிரதிகள் வீதம் கொடுக்கப்படும், அதற்குப்பின் ரூபாவுக்கு 2 பிரதிகள் வீதம் விற்கப்படும். ஆகலான் விரைந்து முன்பண மனுப்புங்கள். ஒரு ரூபாவுக்குக் குறைந்த தொகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது,

சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்லிமிடெட்

தலைமை நிலயம், ) 6, பவளக்காரத் தெரு
திருநெல்வேலி. ( சென்னை.



## ஆநந்த குணபோதினி.

மூன்றும் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000–சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.



வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

### லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாற்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டிய தெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைததுக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ, 119, சென்னை



## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

### ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னடிஸ மெஸ்மரிஸ மென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.



## திரிமூர்த்தி உண்மை

அல்லது

### விலை அணா 12 தேவர்களின் இரகசியம் விலை அணா 12

முழு முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

சூடன் அண்டு கோ., 14, பள்ளித் தெரு, சௌகார்பேட்டை, சென்னை

செந்தமிழ் பயிலுவோருக்குத் தீஞ்சுவைப் பொக்கிஷம்!
அருங்கலா விநோதருக்கு ஆராவமுது.

# அவ்வை அருந்தமிழ்.

வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதி இயற்றியது.

தெய்வப் புலமை வாய்ந்த அவ்வையார் பாடிய சுவை மிகுந்த தனிப் பாடல்கள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு வெளிவருவது இதுவே முதன்முறை. ஒரு பாட்டேனும் இன்பம் விளையாமல் இராது. எல்லாம் கெட்டுருச் செய்யத்தக்கவை. இவற்றைக் கற்போர் தமிழ்ச் சுவையை இனிதுணர்வர். தமிழ்ப் புலவராக விரும்புவோரும் சபையில் உபந்நியாசம் செய்வோரும் சல்லாப வல்லவர்களாகத் திகழ விழைகின்றவர்களும் இவற்றைக் கற்றால் அவர் எல்லாராலும் விரும்பப்படுவர் என்பது உண்மை. இந்நூலை படிப்பவர் ஒரு சபையை ஒரு கணப்பொழுதில் அலங்கரித்து விடலாம். சோம்பி இருப்பவரை ஒரு செய்யுளைக் கொண்டு எழுப்பி உற்சாகப்படுத்தி விடலாம். இதில் யாவரும் கற்றுணர வேண்டிய பல நீதிமொழிகள் அடங்கி யிருக்கின்றன.

## சில முக்கிய அபிப்பிராயங்கள்.

நவசக்தி..............."இந்நூலில் ஔவையார் பாடிய பாடல்கள் பலவும் ஒருங்கே திரட்டப்பட்டு, விரிவுரையுடனும், விசேஷ வியாக்கியானத்துடனும், தக்க மேற்கோள்களுடனும் வெளியிடப் பட்டிருக்கின்றன............ நீதிக் களஞ்சியம் என்று சொல்லப்பட வேண்டிய "ஔவை அருந்தமிழ்" என்னும் இந்நூல் ஒவ்வொரு மாணவரிடத்திலும், ஏன்! ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருக்கவேண்டு மென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்."

தமிழகம்............"இந்நூலானது கற்றாரும், மற்றாரும், பெண்டிரும், பாலரும் பன்முறையும் பயிலத் தகுந்தது."

இந்து சாதனம்..........."இந்நூல் கற்குந்தோறும் களிபெருவகை பயக்கும் பான்மையது. அருந்தமிழ் அறிந்தோ ரொவ்வொருவரும் இவ்வரிய நூலை வாங்கிப் படிப்பது நலமாகும்."

விலை அணா 12. தபாற்கூலி வேறு.

# கந்தபுராணம். (வசனம்)

முருகப் பெருமான் திருவவதாரத்தைப் பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றினும் சிறந்தது கந்தபுராணமே ஆகும். அதுவே முருகவேள் வரலாற்றை முற்ற முடிய நவரசம் பொருந்த இனிய தமிழ்ச் செய்யுட்களால் சைவ சித்தாந்த நெறிதிறம்பாமல் கூறிச் செல்கின்றது. கந்த புராணத்தைச் சைவர் படனஞ் செய்தலோடு அமையாது பூசித்தும் வழிபாடு செய்கின்றனர். பிற சமயத்தாரும் முருகனை வழிபட்டும் அவன் அற்புத மான்மியம் நனி விளங்கும் திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதியும் இன்புற்று வருகின்றனர். ஆதலால் கந்தன் அருமை பெருமைகளை அனைவரும் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். கந்த புராணம் செய்யுள் வடிவத்திலே யிருந்து இருத்தலின் அதனைப் பயிலுவோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்கமாட்டாதாகும். இப்போதுள்ள வசன நூல்களும் மிக விரிந்தும் செய்யுட்களின் போக்கைத் தழுவாமலும் எழுதப் பட்டிருக்கின்றன. இக்குறையெல்லாம் நீக்கும் பொருட்டும் கந்தர் சஷ்டிவிரதம் அனுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுதும் பாராயணம் செய்து முடித்துச் சித்தியடையும் பொருட்டும் பொருத்தமாக இந்நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலே கந்தபுராணச் செய்யுட்களின் கருத்துக்களையும் முறைமையையும் தழுவிச் சுருக்கமாகத் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர் வித்துவான் ஸ்ரீ. முத்துக்கிருஷ்ண ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைப் படிப்போர் மனமுருகி அன்புவயப்பட்டு முருகதாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அரிய நூலிலே கண்ணுக்கினிய திருவுருவப்படங்கள் சிலவற்றையும் சேர்த்திருக்கிறோம். இதனைப் பெண்பாலாரும், சிறுவரும், முதியோரும் எளிதில் படித்து உணரலாகும். இது தமிழகத்து பூந்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசி, பக்தித் தேன் சொட்டி ஞானக்கனிந்து நிற்றலைக் கண்டு அன்பர் களி துளும்புவார்களாக.

ரப் பேப்பர் கலிக்கோ பைண்டு விலை ரூ. 2 0 0
கிளேஸ் பேப்பர் கலிக்கோ பைண்டு ,, ரூ. 2 8 0

தபால்கூலி வேறு.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

குறிப்பு:—ஒரே தடவையில கந்தபுராணம வசனம் ஒன்றும் அவ்வை அருந்தமிழ் ஒன்றும் ஆர்டர் செய்தால் 14 அழகிய தெய்வதா படங்கள் அடங்கிய இந்துசமயக் காலண்டர் ஒன்று (எட்டணா விலையுள்ளது) இனாமக சேர்த்து அனுப்பப்படும்.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படித் தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

**இல்வாழ்வை நல் வாழ்வாக**

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும்.

## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

**மூன்றும் பதிப்பு விலை ரூ. 2.**

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமதுவிலாசம்:—

**வாஸன் புஸ்தகசாலை,**

**244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதருஸ்.**






## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கெட்லாக் இனும்.

ச. கோ. இ காதர்மீரு சாயபு,

நெர்ட்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.

தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைக்கிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் நம் பெயர் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சிகாற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதருஸ்






## குளிர்ச்சிபெற நேர்வழி.

தைலங்களுக்கெல்லாம் முதல்தரமானது, தேகத்திலுள்ள சூட்டைத் தணிப்பதில் நிகரற்றது. ஒரு முறை பரீக்ஷித்தால் அடிக்கடி இதனை வாங்கி ஆனந்தமடைவீர்கள்.

அயன்மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

3 மீ வரை வரக்கூடிய அளவு டின் 1-க்கு ரூ. 1—8—0. தபால் செலவு 0—10—0. கேட்லாக் இனாம்.

விலாசம்:—

சத்தியவேத வைத்தியசாலை,

வரகனேரி, நெ. 51. திருச்சி.


பார்ப்பனீயம் ஒழிய

குடி அரசையும், திராவிடனையும் படியுங்கள்.

ஸ்ரீமதி கண்ணம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.